RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 29, 29 யூலை 2022 இதழ்:- 14

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!


# கோத்தாவுக்கு மேலும் 14 நாட்கள் விசாவை நீடித்தது சிங்கப்பூர்!



சிறிலங்காவின் முன்னாள் அதிபர் கோட்டாபய ராஜபக்ச சிங்கப்பூரில் தங்கியிருப்பதை நீடிக்கவுள்ளதாக சிங்கப்பூர் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் தனிப்பட்ட விஜயம் ஒன்றிற்காக இங்கு வந்த போது வழங்கப்பட்ட அவரது குறுகிய கால பயண விசா அனுமதி மேலும் 14 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது.
(3ம் பக்கம் பார்க்க)

# கோத்தாவைக் கைது செய்யுமாறு சிங்கப்பூர் அரசியல்வாதி சட்டமாஅதிபருக்குக் கடிதம்!



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாயராஜபக்சவை கைது செய்ய வேண்டும் என சிங்கப்பூரின் சீர்திருத்த கட்சியின் செயலாளர் நாயகம் கென்னத் ஜெயரட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார். சிங்கப்பூரின் சட்டமா அதிபர் லூசியன் வொங்கிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் இந்த வேண்டு கோளை விடுத்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் யுத்த குற்றம் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகளை சுமத்த வேண்டும் என கோரி இந்த கடிதத்தில் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.(3ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கோட்டாவுக்கு நோட்டீஸ்!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நோட்டீஸ் அனுப்ப உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. நாட்டையும் மக்களையும் இந்த நிலைக்கு இட்டுச் சென்றவர்களுக்கு எதிராக விசாரணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.மேற்படி மனுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தனிப்பட்ட பிரதிவாதியாக பெயரிட உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு தீர்மானித்துள்ளது. இதன்படி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அவருக்கு அழைப்பாணை விடுக்கப்படவுள்ளது. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் எல்.டி.பி.தெஹிதெனிய ஆகியோர் முன்னிலையில் விசாரணை இடம் பெற்றது. இதேவேளை தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பெயரை அதிலிருந்து நீக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial

## Team SIVA WILL BRING THE BEST RESULTS!



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

18 Years Real Estate Experience


**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




HOMELIFE HIGHER STANDARDS
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Central Park / Bramalea

**Brampton** 674,900
Bedrooms: 3 Washrooms: 2
Lots Of Upgrades, Neutrally Painted

### Park Rd / Wentworth

**Oshawa** $499,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Well Maintained Complex


### Kennedy & Progress

**Scarborough** $548,000
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location

### Eglinton/Markham

**Scarborough** $624,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept, Very Large Rooms


### Lawrence/ Galloway

**Toronto** $499,900
Bedrooms: 4 Washrooms: 2
New Hardwood Floors Throughout

### Mccowan/401

**Scarborough** $589,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Newly Renovated ,Open Concept

### Kennedy/401

**Scarborough** $599,900
Bedrooms: 1 Washrooms: 1
Close To High Way, Shopping Plaza


### Dixie/Clark

**Brampton** $629,900
Bedrooms: 3 Washrooms: 2
Upgraded & Spacious Corner Unit

### Eglinton/Markham

**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated & Low Maintenance Free

### Yonge/Davis

**Newmarket** $1,699,000
Bedrooms:4+1 Washrooms: 5
Over 4000 Sq Ft

### Hwy 7/ Leslie

**Markham** $649,900
Bedrooms: 3+1 Washrooms: 3
Open Concept, Newer Paint

### Don Mills/Eglinton



**Scarborough** $549,900
Bedrooms: 3 Washrooms: 2
Location! Location! Location!

### Donald Cousens Pkwy / 16th Ave

**Markham** $1,499,999
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### Meadowvale & Ellesmere

**Scarborough** $1,699,000
Bedrooms: 4 Washrooms: 4
$$$$ On Upgrades

### Brimorton/ Scar. Golf


**Scarborough** $1,100
Bedrooms: 1 Washrooms: 1
Basement Apartment for Rent

### Major Mack/Mccowan


**Markham** $2,900
Bedrooms: 4 Washrooms: 3
Throughout Hardwood Floor

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART
4A WADE AVE
TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கோத்தாவுக்கு மேலும் 14 நாட்கள் விசாவை நீடித்தது சிங்கப்பூர்!



சிறிலங்காவின் முன்னாள் அதிபர் கோட்டாபய ராஜபக்ச சிங்கப்பூரில் தங்கியிருப்பதை நீடிக்கவுள்ளதாக சிங்கப்பூர் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் தனிப் பட்ட விஜயம் ஒன்றிற்காக இங்கு வந்த போது வழங்கப்பட்ட அவரது குறுகிய கால பயண விசா அனுமதி மேலும் 14 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது.

பணவீக்கம் அதிகரித்து உணவு மற்றும் எரிபொருள் போன்ற அடிப்படைத் தேவைகளின் விலைகள் உயர்வடைந்ததால், பாரிய பொருளாதார நெருக்கடி மற்றும் கோட்டாபய அரசாங்கத்திற்கு எதிரான பரவலான எதிர்ப்புகளுக்கு மத்தியில் கோட்டாபய ராஜபக்ச நாட்டை விட்டு வெளியேறி இருந்தார்.


இலங்கையில் இருந்து மாலைதீவுக்கு சென்ற கோட்டாபய அங்கும் நிலவிய கடும் எதிர்ப்பு காரணமாக ஜூலை 14 அன்று, மாலத்தீவில் இருந்து விமானத்தில் சிங்கப்பூரின் சாங்கி விமான நிலையத்திற்கு சென்றிருந்தார்.

இந்நிலையில் சிங்கப்பூர் அரசு கோட்டாபய ராஜபக்சவுக்கு 14 நாட்கள் பயண விசா வழங்கியிருந்தது. வழங்கப்பட்ட குறுகிய கால விசா முடிவடையும் தருணத்தில், மேலும் 14 நாட்களுக்கு விசா நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சிங்கப்பூரில் நடைமுறையில் உள்ள சாதாரண விடயமாகும்.

கோத்தபாய ராஜபக்சவிற்கு வழங்கப்பட்டுள்ள புதிய விசா 11ம் திகதி முடிவடையும் என தெரிய வருகின்றது. ராஜபக்ச ஆரம்பத்தில் சிட்டிசென்டரில் உள்ள ஹோட்டலில் தங்கியிருந்தார், தற்போது தனியார் வீடொன்றில் தங்கியுள்ளார் என தெரிய வருகின்றது. சிங்கப்பூருக்கு வந்தது முதல் அவர் வெளியில் நடமாடவில்லை.

14ம்திகதி அவர் சிங்கப்பூர் சென்ற வேளை சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் தனிப் பட்ட விஜயத்தை மேற்கொண்டு வந்த அவருக்கு அனுமதி வழங்கப்பட்டு ள்ளது அவர் புகலிடம் கோரவில்லை என அவருக்கு புகலிடம் வழங்கவில்லை என தெரிவித்திருந்தார்.

# சிங்கப்பூரில் வைத்து கோத்தாவைக் கைது செய்யுமாறு சிங்கப்பூர் அரசியல்வாதி சட்டமாஅதிபருக்குக் கடிதம்!



(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜெனீவாவில்– ஐக்கிய நாடுகள் சபையில் கடந்த வருடம் ஆற்றிய உரையில் எங்கள் அரசாங்கம் (சிங்கப்பூர்) சர்வதேச நியாயாதிக்கத்தை அங்கீகரித்திருந்தது என அவர் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக பெருமளவு ஆதாரங்கள் உள்ளன .அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பெருமளவிலானவை, கொடுரத்தன்மை கொண்டவை என தெரிவித்துள்ள கெனெத் ஜெயரட்ணம், அவர் மீது குற்றச்சாட்டினை சுமத்துவதற்கான ஆதார தேவைகள் போதியளவிற்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

அவருக்கு எதிரான குற்றங்களை சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் குற்றவியல் முறைப்பாட்டில் காணமுடிகின்றது அதனை நான் இங்கே மீண்டும் தெரிவிக்க வேண்டியதில்லை. அந்த குற்றச்சாட்டுகளில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் சரணடைந்த போராளிகள் படுகொலை செய்யப்பட்ட குற்றச்சாட்டும் வேண்டுமென்றே குண்டுவீச்சு மருத்துவமனைகள் மீதான பொதுமக்களின் நிலைகள் மீதான எறிகணை வீச்சு உடல்களை சிதைத்தல் பாலியல் வன்முறையை ஒரு போர் ஆயுதமாக பாவித்தல் போன்ற குற்றச்சாட்டுகள் உள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

நான் தமிழனாகயிருந்தாலும் சிங்கப்பூர் பிரஜை என்ற அடிப்படையில் எங்களது பன்முக கலாச்சாரத்தை பாராட்டுகின்றேன், இது சிறுபான்மை இனத்தவர் நல விவகாரம் இல்லை, எனவும் தெரிவித்துள்ள அவர் கோத்தபாய ராஜபக்ச குடும்பம் சிங்கப்பூரில் தங்கியிருப்பது சிங்கப்பூர் தமிழர்களை அவமதிக்கும் செயலாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் தமிழர்களின் உறவினர்கள் பல இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது படையினரால் கொல்லப் பட்டுள்ளனர் காயங்களிற்குள்ளாக்கப்பட்டுள்ளனர் வீடுகளை இழந்துள்ளனர் பட்டினியை எதிர் கொண்டுள்ளனர் அல்லது இருந்த சிலவற்றையும் தொலைத்து விட்டு நாட்டிலிருந்து தப்பியோட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். தனது கணவரை வன்முறை கும்பல் எவ்வாறு படுகொலை செய்தது என தனது உறவினர் ஒருவர் தெரிவித்தார் என எனது தந்தை தெரிவித்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



றொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

31 யூலை 2022- ஞாயிற்று ஆடிப்பூரம்

உபயம்:- சபேசன், ஜெயதாஸ் சகோதரர்கள்

05 ஆகஸ்ட் 2022- வெள்ளிக்கிழமை

வரலட்சுமி விரதம் (விளக்குப்பூஜை)

உபயம்:- சாரதா விமல்ராஜ் குடும்பம்

விளக்குப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விளக்குப் பூஜையில் பங்கு பற்றும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்





Amma Pawn Broker

அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு

அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

1.0% முதல் 1.5% வரை

அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8

ammapawnbroker@gmail.com

416-757-0034
416-994-3861

# கறுப்பு யூலை 39வது ஆண்டு நினைவு நாள் கனடியப் பிரதமரின் விசேட அறிக்கை!



இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம் பெற்ற கறுப்பு ஜீலை கொடூரமான வன்முறைகளில் தங்கள் உயிர்கள், உடமைகளை இழந்த மற்றும் இடம் பெயர்ந்தவர்களை நினைவு கூருகிறோம் என கறுப்பு ஜீலை 39ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாடு முழுவதும் பல தசாப்தங்களாக நீடித்த அமைதியின்மை மற்றும் பதற்றங்களைத் தொடர்ந்து, கொழும்பில் தமிழர் படுகொலைகள் இடம் பெற்றன. கறுப்பு ஜீலை என்று அழைக்கப்படும் இந்த கொடிய நிகழ்வுகள் 26 ஆண்டுகள் நீடித்த ஆயுத மோதலைத் தூண்டியது. இது பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழக்கக் காரணமானது. தமிழர்களுக்கு சொந்தமான வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் அழிக்கப்பட்டன. இலட்சக்கணக்கான மக்கள் நாட்டை விட்டு வெளியேற நிர்பந்திக்கப்பட்டனர்.

கருப்பு ஜீலை வன்முறைகளைத் தொடர்ந்து வந்த மாதங்களில் இலங்கையில் நடந்த வன்முறைகளுக்கு பதிலளிக்க கனடா அரசாங்கம் ஒரு சிறப்பு நடவடிக்கையை செயற்படுத்தியது. இது 1,800 க்கும் மேற்பட்ட தமிழர்கள் கனடாவில் குடியேற உதவியது. கறுப்பு ஜீலை கொடூரங்களில் இருந்து தப்பிய பல தமிழ் கனேடிய மக்களை சந்திக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. அவர்களின் இழப்பு, இடப்பெயர்வு மற்றும் பின்னடைவு போன்ற வேதனையான அனுபவங்களால் நெகிழ்ந்து போனேன்.

கனடா இப்போது உலகின் மிகப்பெரிய புலம் பெயர்ந்த தமிழர்களின் புகலிடங்களில் ஒன்றாக உள்ளது. கனடாவை இன்று வலுவான, துடிப்பான மற்றும் பல்கலாசார நாடாக மாற்றுவதற்கு பெருமளவில் பங்களித்ததற்காக தமிழ் கனேடியர்களுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்.

தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உதவ கனடா தயாராக உள்ளது. இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கும், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் சட்டத்தின் ஆட்சியை பேணுவதற்கும் இலங்கை அரசாங்கத்தையும் இலங்கை நாடாளுமன்றத்தால் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் கனடா வலுவாக ஊக்குவிக்கிறது.

இந்த இக்கட்டான காலங்களில் போராட்டக்காரர்களின் உரிமைகள் மற்றும் பத்திரிகை சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் கனடா மீண்டும் வலியுறுத்துகிறது.

கறுப்பு ஜீலை மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட மோதலின் போது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர், நண்பர்கள் அனைவருடனும் எங்கள் எண்ணங்கள் உள்ளன. அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாங்கள் ஒன்றிணைந்து செயல்பட உறுதி பூண்டுள்ளோம் என்றுள்ளது.

# கோட்டா - மகிந்தாவுக்கு கனடா தடைகளை விதிக்க வேண்டும்!



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக கனடிய அரசு தடைகளை விதிக்க வேண்டும் என்று அந்நாட்டின் ஆளும் லிபரல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் சமகால அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் ஒட்டாவாவில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை மிகக் கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. இதற்கு அங்கு ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் பின்பற்றி வந்திருந்த தவறான கொள்கைகளே காரணமாக உள்ளன.

குறிப்பாக, போர் முடிவடைந்து 13ஆண்டுகளாகின்ற போதும், பாதிக்கப்பட்டதரப் பினரை மேம்படுத்துவதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கப்படவில்லை. அதேநேரம், அந்தப் போரில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக் கூறப்படவில்லை.

குறிப்பாக, 2008, 2009ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இலங்கையின் தமிழர்களின் தாயகப்பகுதிகளில் நடத்தப்பட்ட கொடூரங்களுக்கு இன்னமும் பொறுப்புக் கூறப்படவில்லை. இதற்கு பொறுப்புக்கூற வேண்டிய தலைவர்களின் பிரதான நபர்களாக இருப்பவர்கள் கோட்டாபய ராஜபக்ஷவும், மஹிந்தராஜபக்ஷவுமே ஆவர். இவ்வாறான நிலையில் மக்கள் புரட்சியின் காரணமாக கோட்டாபய ராஜபக்ஷ தற்போது இலங்கையில் இருந்து வெளியேறி சிங்கப்பூரில் தங்கியிருக்கின்றார். அங்கிருந்து தான் அவர் தனது இராஜினாமாவைச் செய்துமுள்ளார்.

அதேபோன்று பிரதமராக இருந்த அவருடைய சகோதரர் மஹிந்த ராஜபக்ஷவும் இப்போது பதவியில் இருந்து விலகியுள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் கோட்டாபயவும், மஹிந்தவும் தமக்கு காணப்பட்ட குற்றவியல் வழக்கு விலக்கீட்டு சிறப்புரிமைகளை இழந்துள்ளனர்.

ஆகவே, அவர்கள் மீது பொறுப்புக்கூறலுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, சர்வதேச தரப்புக்கள் இந்த விடயத்தில் தீவிரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

கடந்த காலத்தில், சர்வதேச தரப்புக்கள் அவர்களை சுதந்திரமாக நடமாடுவதற்கு அளித்த வெளியை கைவிட்டு, உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அனைத்து அரசாங்கங்களிடத்திலும் கோருகின்றேன்.அத்துடன், கனடிய அரசாங்கம் கோட்டாபய, மஹிந்த ஆகிய இருவரும் நாட்டுக்குள் பிரவேசிப்பது உட்பட அனைத்துவிதமான தடைகளையும் அவர்களுக்கு எதிராக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன் என்றார்.

இதேவேளை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமைக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் யூரி மேட்டேரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் வாழ்த்துக்களை அவர், ஜனாதிபதி விக்ரமசிங்கவிற்கு தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ரஷ்யாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான விருப்பத்தை, ரஷ்ய ஜனாதிபதி, ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கான வாழ்த்து செய்தியின் ஊடாக வெளியிட்டுள்ளார். பல்வேறு துறைகளில் ஆக்கபூர்வமான இரு தரப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதில் தாம் ஆர்வமாக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்க் கூட்டமைப்பின் இராஜதந்திர நம்பகத் தன்மை

தமிழ் மக்கள் ஒரு அரசு இல்லாத தரப்பு. அரசு இல்லாத தரப்புக்களுக்கான இராஜதந்திர வாய்ப்புக்கள் மிகவும் பலவீனமானவை. இறுதி யுத்தத்தின் போது இடம் பெற்றவை எனக் கூறப்படும், மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தான், தமிழ் மக்களுக்கான அரசியலை சர்வதேச அரங்குகளில் நீர்த்துப் போகாமல் பாதுகாத்து வருகின்றன.

கொழும்பின் விடாப்பபடியான அணுகுமுறைகளும் இதற்கொரு காரணமாகும். கொழும்பின் ஆட்சியாளர்கள் சில விடயங்களில் முன்னேற்றத்தை காண்பிப்பார்களாயின், சர்வதேச அவதானமும் நாளடைவில் நீர்த்துப் போய் விடும். இன்றைய நிலையில், தமிழர் களின் சர்வதேச குரலாக தொழில்படும் புலம்பெயர் சமூகமும் குறிப்பிடத் தக்களவு செல்வாக்கை செலுத்தி வருகின்றது.

ஆனால், மறபுறமாக தாயகத்தில் இயங்கும் அரசியல் தரப்புக்களின், இராஜதந்திர அணுகுமுறைகள் எவ்வாறிருக்கின்றன? சில தினங்களாக இடம்பெற்ற சம்பவங்களின் அடிப்படையில் சிந்திப்பதாயின், பனையால் விழுந்தவரை மாடு ஏறி மிதித்த – கதையாகவே தமிழ் தேசியவாத தரப்புக்களின் இராஜ தந்திர அணுகுமுறை இருக்கின்றது.

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின் போது, ஏற்பட்ட சில சம்பவங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இராஜதந்திர நம்பகத் தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

எமக்கு கிடைக்கும் தகவல்களின்படி, இந்திய தூதரக சர்ச்சையால் ஏனைய இராஜதந்திரிகள் அதிருப்தி அடைந்திருக்கின்றனர். அவர்கள் மத்தியில், கூட்டமைப்பின் நம்பகத்தன்மை, பெரியளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இராஜதந்திர தொடர்புகள் என்பவை பரஸ்பர நம்பகத் தன்மையின் அடிப்படையில் இடம்பெறும் விடயங்களாகும். நம்பகத்தன்மை போய்விட்டால், அதன் பின்னர் அதனை மீளவும் கட்டியெழுப்புவது மிகவும் சவாலான தொருவிடயமாகும்.

2009இற்கு பின்னரான காலத்தில், சம்பந்தன் தலைமையில் கடந்த 13வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட அரசியல் முன்னெடுப்புக்களில், பல்வேறு இராஜதந்திர சறுக்கல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

இதில், பாரதூரமானது இந்திய பிரதமர் சிறி நரேந்திர மோடியுடனான சந்திப்பை அற்ப காரணங்களை கூறி நிகராகரித்தமை. கடவுச் சீட்டைக் காணவில்லை, தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் மகனின் திருமணம் என்று கூறியே, சம்பந்தன் அதனை நிராகரித்திருந்தார்.

134 கோடி மக்களின் தலைவர், உலகளவில் செல்வாக்கு மிக்க தலைவர்களில் ஒருவர், தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கிய போது, அதனை ஒருவர் நிராகரிக்கின்றார் என்றால், அவரின் இராஜந்திர ஆற்றல் தொடர்பில் என்ன கூறமுடியும்?

சில மாதங்களுக்கு முன்னர், கூட்டமைப்பின் நிபுணர் குழுவென்னும் பெயரில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு, சுமந்திரன் தலைமையில், மூவரடங்கிய குழுவினர் சென்றிருந்தனர்.

அதில் சென்ற இருவர், நாடு திரும்பியதும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பேசியதில்லை. அவர்கள் எதற்காக சென்றார்கள் என்று அவர்களுக்கே தெரியாது. இந்தப் பயணம் தொடர்பில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு தெரியப்படுத்தப் படவில்லை.

நாடு திரும்பியதைத் தொடர்ந்து, ஜனவரி மாதம் நடுப்பகுதிக்குள் அமெரிக்கா கடுமையான முடிவுகளை எடுக்கவுள்ளதாகக் கூறப்பட்டது. ஆனால், அப்படியெதுவும் இடம்பெறவில்லை. ஏனெனில், அனைத்துமே தேர்தல் பிரசார நோக்கம் கொண்ட கதைகளேயேன்றி உண்மைகளல்ல.

இப்போதும் தங்களுடைய திட்டம் வெற்றியளிக்க வேண்டும் என்பதற்காக, இராஜதந்திர தொடர்புகள் தவறாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சீனத்தூதரக சந்திப்பு தொடர்பில் கூட்டமைப்பில் எவருமே தெரிந்திருக்கவில்லை.

உண்மையில், என்ன அடிப்படையில் இராஜதந்திரிகளை கூட்டமைப்பின், பாராளுமன்ற உறுப்பினர்கள் அணுகுகின்றனர்? கூட்டமைப்பின் இராஜதந்திர தொடர்புகள் எவருடைய அனுமதியின் கீழ் கையாளப்படுகின்றன?

பதில் இலகுவானது. கூட்டமைப்பில் இராஜதந்திர நெறிமுறையென்று ஒன்றில்லை.

தனிப்பட்ட நபர்களின் விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையிலேயே அனைத்தும் இடம் பெறுகின்றன. கூட்டமைப்பில் அக்கறையுள்ளவர்கள், இந்த நிலைமையை மாற்றியமைப்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

# ரணில் காலத்தில் இனப்பிரச்சனையைத் தீர்க்க தமிழ் தலைவர்கள் முயற்சிக்க வேண்டும் என்கிறார் விக்கிரமபாகு கருணாரத்த!

கேள்வி: நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பதவியேற்றிருப்பது தொடர்பாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில்– இன்று இலங்கையில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற தென்னிலங்கை தலைவர்களில் இனவாதமற்ற ஒரு தலைவராக ரணில் விக்கிரமசிங்க காணப்படுகின்றார். தேசிய இன பிரச்சினையை தீர்க்கும் எண்ணம் கொண்ட ஒரு தலைவராகவும் அவர் காணப்படுகின்றார். இத்தகைய அடிப்படை அம்சங்களை கருத்திற் கொண்டு நாம் 2015 இல் அவருடன் இணைந்து இனவாதத்திற்கு எதிராகவும் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கவும் நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்புக்களை பலப்படுத்தவும் ஒன்றிணைந்து செயற்பட்டோம். எம்முடன் இடதுசாரி அமைப்புக்கள், தொழிற்சங்க அமைப்புக்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் என அனைத்துப் பிரிவினரும் ஒன்றிணைந்து செயற்பட்டனர். இதன் விளைவாக 2015 ஜனவரி 8 ஆம் திகதி நாட்டில் அமைதி புரட்சி ஏற்பட்டது. ஆனாலும் பேரினவாதம் மிக மூர்க்கத்தனத்துடன் செயற்பட்டு எதிர்ப் புரட்சியை உருவாக்கி 2019 இல் கோதாபய ராஜபகஷவை பதவியில் அமர்த்தினர். இன்று அவர் விரட்டப்பட்டுள்ளார். ஆனால் அவருக்கு இனவாதத்தை போதித்தவர்கள் நல்லவர்கள் போல் நடமாடுகின்றனர்.

கேள்வி: ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு தாங்கள் முன் வைக்கும் ஆலோசனைகள் என்ன?

பதில்: இந்த நாட்டின் மக்கள் மிக மோசமான அவல நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களின் துயரைப் போக்க உடனடியான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.




மேலும் தமிழ் தேசியப் பிரச்சினை தொடர்பான தீர்வில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். அத்துடன் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் போனவர்கள் தொடர்பான நம்பிக்கை, இராணுவ கையிருப்பில் உள்ள நிலங்களை மக்களுக்கு மீள கையளித்தல் போன்ற விடயங்களை தனது அதிகாரத்தை கொண்டு தீர்க்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் கடந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் விரோத செயற்பாடுகள் தொடர்பான மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு மதிப்பளித்து புதிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கேள்வி: காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்பு தரப்பினர் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பாக...

பதில்: நவசமசமாஜக்கட்சி பாதுகாப்பு தரப்பினரின் செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கிறது. இரு தரப்பினரும் மேற்படி விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடி. ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்க வேண்டும். காலி முகத்திடல் போராட்டக் களத்தில் பல தரப்புக்கள் காணப்படுகின்றன. எனவே ஒருமனதான தீர்மானத்தை எட்டுவது சிரமமான விடயமாகும். எது எப்படியோ போராட்டக்காரர்களை வெளியேற்ற பாதுகாப்பு தரப்பினர் எடுத்த அணுகுமுறை மனிதாபிமானமற்றது என்றே நாம் கருதுகின்றோம்.

கேள்வி: தமிழ் தலைவர்களுக்கு தாங்கள் முன்வைக்கும் ஆலோசனை...

பதில்: தென்னிலங்கை அரசியல் களத்தில் சம்பந்தப்படாமல் தனித்த பயணத்தில் தமிழ் தலைவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். மேலும் தமக்குள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் இவர்கள் தயார் இல்லாத நிலையில் உள்ளனர். தமிழ் மக்களுக்கான எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற போராட்ட வழி முறைகளை தவிர்த்து வேறு ஒரு பாதையிருப்பதாக தெரியவில்லை. இவர்கள் போராட்ட செயற்பாடுகளிலும் நாட்டமில்லாத நிலையில் தென்னிலங்கையில் தமக்குரிய நேச சக்திகளுடன் இணைந்து போராடுவதிலும் தயக்கம் காட்டுகின்றனர். வெறும் ஊடக சந்திப்புக்கள் மூலம் தமிழ் மக்களுக்கான விடுதலையை ஒரு போதும் எட்ட முடியாது.

கேள்வி: தென்னிலங்கை எதிர் அணியினர் தொடர்பாக என்ன கூற விரும்புகின்றீர்கள்...

பதில்:– சகல எதிர் அணியினரும் பிரச்சினையை கூறுகின்றார்களே தவிர எவரும் அதற்கான தீர்வை முன்வைக்கவில்லை. நாட்டின பொருளாதார நிலையை மீள கட்டியெழுப்புதல் தொடர்பாக இவர்களின் அறிவு ஞானம் காலம் கடந்த நிலையில் காணப்படுகிறது. தமிழ் தேசிய பிரச்சினை தொடர்பில் மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றனர். எல்லோரும் ரணில் விக்ரமசிங்கவை தாக்குவதில் ஒத்த நிலையில் உள்ளனர். இன்றைய இலங்கையில் அரசியல் பொருளாரதார பிரச்சினைகளுக்கான தீர்வில் எதிரணியினரிடம் விடையில்லாததால் ரணில் விக்ரமசிங்கவின் புதிய ஜனனம் உருவாகியுள்ளது. இதன் மூலம் நாடு மாற்றமடையுமா என்பதை பொருத்திருந்து பார்ப்போம்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# மக்களை அடக்குவதை விட்டு பிரச்சனைகளைத் தீர்க்க முன்னுரிமை வழங்குங்கள்!

# சர்வதேச நாடுகளின் 158 புத்திஜீவிகள் கூட்டாக வலியுறுத்தல்!

கொழும்பில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின்மீது கடந்த 22 ஆம் திகதி படையினரால் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான வன் முறைத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதாக சர்வதேச நாடுகள் பல வற்றிலும் இயங்கி வரும் முன்னணி பல்கலைக்கழகங்களில் பணியாற்றிவரும் புத்திஜீவிகள் 158பேர் இணைந்து கூட்ட றிக்கையொன்றின் மூலம் தெரி வித்துள்ளனர்.

அது மாத்திரமன்றி முன்னைய முறை யற்ற ஆட்சியாளருக்கு எதிராக பரந்தள வில் மேற்கொள்ளப்பட்ட அமைதி வழிப் போராட்டங்களின் விளைவாக வெற்றிட மான ஜனாதிபதிப் பதவிக்காகவே ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டார் எனக் குறிப்பிட்டுள்ள அவர்கள், அவ்வாறிருக்கையில் முன் னைய ஆட்சியாளர்களின் அதே முறை யைப் பின்பற்றுவது நாட்டை முன்னோ க்கி நகர்த்திச் செல்வதற்கு ஒருபோதும் உதவப் போவதில்லை என்றும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கொழும்பு, காலிமுகத்திடல் `கோட்டா கோ கம' மீதும், அமைதிப் போராட்டக் காரர்கள் மீதும் கடந்த 22 ஆம் திகதி நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதல் களைக் கண்டித்து பிரிட்டன், அமெ ரிக்கா, கனடா, நெதர்லாந்து, சுவீடன், அவுஸ்திரேலியா, சுவிஸ்லாந்து, ஜேர் மனி, இந்தியா, பிரான்ஸ், நோர்வே, சிங்கப்பூர், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இயங்கிவரும் முன்னணி பல்கலைக் கழகங்களில் பேராசிரியர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் கடமையாற் றும் புத்திஜீவிகள் 158 பேரின் கையெ ழுத்துடன் வெளியிடப்பட்டிருக்கும் கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டிரு ப்பதாவது:

இலங்கை மற்றும் தெற்காசிய நாடு களைப் பிரதிநிதித்துவப்படுத்தி மிகப் பரந்தளவில் பணியாற்றி வரும் புத்தி ஜீவிகளான நாம் கடந்த 22 ஆம் திகதி கொழும்பில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின்மீது படையினரால் நடத்தப்பட்ட மிலேச்சத் தனமான வன்முறைத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அமைதிவழிப் போராட்டக்காரர்கள் அறுவர் கடத்தப்பட்டு, தாக்கப்பட்டு, முழங்கால்களால் புகையிரதப்பாதையில் நடக்கவிடப்பட்டு, அவர்கள் மயங்கி விழும் வரையில் படையினரால் தாக்கப் பட்டுத் துன்புறுத்தப்பட்டதாகக் கிடைத் திருக்கும் தகவல் எம்மை பேரதிர்ச்சி யடையச் செய்துள்ளது.

அமைதிவழிப் போராட்டத்தை முன்னி ன்று வழி நடத்திய 9 முன்னணி செயற் பாட்டாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட மையை (பின்னர் பிணையில் விடுவிக்க ப்பட்டனர்) நாம் கடுமையாகக் கண்ட னம் செய்கின்றோம்.

வன்முறைகளற்ற முறையில் ஆர்ப்பாட் டங்களில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் மீது புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்று 24 மணி நேரத்திற்குள்ளாகவே காட்டு மிராண்டித்தனமான தாக்குதலுக்கு உத்தர விட்ட ரணில் விக்ரமசிங்கவின் செயற்பாடானது, அவரது ஆட்சிமுறை தொடர்பில் கவலைக்குரிய சமிக்ஞை யைக் காண்பித்திருப்பதுடன் அதிர்ச்சி யையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

அமைதி வழியிலான செயற்பாட்டாளர் கள் கடந்த பல மாதங்களாக நாட்டின் நெருக்கடி நிலைக்குக் காரணமானவர் களுக்கு எதிராக ஜனநாயக முறையில் போராட்டங்களை முன்னெடுத்து அனை வரது கவனத்தையும் ஈர்த்திருந்தனர்.

அதுமாத்திரமன்றி நாட்டுமக்களின் அறிவை மேம்படுத்தும் நோக்கிலான செயற்பாடுகளை பல்கலைக்கழகம், நூலகம் போன்ற பல்வேறுபட்ட வழி களில் முன்னெடுத்திருந்தனர்.

அமைதிவழிப் போராட்டக்காரர்களை `பாசிஸவாதிகள்' என சித்தரிப்பது முற்றி லும் தவறானதும், கண்டிக்கத்தக்கது மான செயற்பாடு என்பதுடன், அவர்கள் மீது அரச படைப்பலத்துடன் கூடிய வன்முறை பிரயோகிக்கப்பட்டமையை நியாயப்படுத்துவதற்கான முயற்சியாகவே அதனை நோக்க வேண்டியிருக்கின்றது.

முன்னைய முறையற்ற ஆட்சியாளரு க்கு எதிராக பரந்தளவில் மேற்கொள்ளப் பட்ட அமைதிவழிப் போராட்டங்களின் விளைவாக வெற்றிடமான ஜனாதிபதிப் பதவிக்காகவே ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப் பட்டார்.

அவ்வாறிருக்கையில் முன்னைய ஆட்சி யாளர்களின் அதே முறையைப் பின்பற்று வது நாட்டை முன்னோக்கி நகர்த்திச் செல்வதற்கு ஒருபோதும் உதவப் போவ தில்லை என்பதுடன் மக்களைத் தண்டிப்பதை முதலாவது கடமையாகக் கருதாமல், அவர்கள் முகங் கொடுத்தி ருக்கும் பிரச்சினைகளுக்கு உரிய வாறான தீர்வைப் பெற்றுக் கொடுப்ப தையே முன்னிலைப்படுத்த வேண்டும்.

இவ்வாறானதொரு பின்னணியில் அரசிய லமைப்பு மற்றும் சர்வதேச சாசனங்களு க்கு அமைவாக நாட்டுமக்களின் அடிப் படை உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் அதேவேளை, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் ஆகிய வற்றை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின் றோம்.

அது மாத்திரமன்றி கொழும்பு, காலி முகத்திடல் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளடங்கலாக நாட்டின் சகல பாகங்களிலும் உள்ள அதிகரித்த இராணுவப்பிரசன்னத்தை உடனடியாக நீக்குமாறும் போராட்டக்காரர்களுக்கு எதிராக வன்முறையைப் பிரயோகித்தவர் களைப் பொறுப்புக்கூறச் செய்யுமாறும் வலியுறுத்துகின்றோம் என்று அக்கூட்ட றிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது அவசியம்!

# புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் பேசத் தயார்-நீதிஅமைச்சர்




தமிழர்கள் மத்தியில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். பேச்சு வார்த்தைகளின் ஊடாக தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது அவசியமாகும். எதிர்கால தலைமுறை யினருக்கு இப் பிரச்சினைகளை மீதப்படுத்த கூடாது என்பதை தமிழ் அரசியல் தரப் பினர் விளங்கிக் கொள்ள வேண்டும். புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தலை வர்களுடன் வெளிப்படை தன்மையுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட தயார் என நீதி,சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜ பக்ஷ சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றில் 27 யூலை 2022 புதன்கிழமை இடம் பெற்ற அவசரகால சட்ட த்தின் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு காலம் காலமாக பல பிரச்சினைகள் உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தில் நீதியமைச்சராக பதவி வகிக்கையில் பல பிரச்சினைகளு க்கு தீர்வு காண உரிய நடவடிக்கையினை முன்னெடு த்தேன். காணாமலாக்கப்பட்டோரது காரியாலயம் ஸ்தாபித்தோம். இருப்பினும் அதன் செயற்பாடு மந்த கரமாக உள்ளது. துரிதப்படுத்த ஆலோசனை வழங்கி யுள்ளோம். நட்டஈடு வழங்கும் காரியாலயத்தின் செயற் பாட்டை விரிவுபடுத்த தீர்மானித்துள்ளோம்.

தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரை பிற இனத்தவர் கள் என ஒரு போதும் வேறுபடுத்தவில்லை. இலங்கையர்கள் என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு ஒன்றிணைந்து செயற்படுகிறோம். புலம்பெயர் அமைப்புகளின் தலைவர்களை சந்தித்தேன். அவர்கள் இரகசிய பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண் டும் என குறிப்பிட்டார்கள்.

இரகசியமாக பேச்சுவார்த்தை தேவையில்லை .வெளிப் படைத்தன்மையுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடு வோம் என்றேன். பல்வேறு காரணிகளினால் அவர்கள் பிற நாடுகளில் வாழ்கிறார்கள். பிரச்சினைகளை மாத் திரம் கதைத்துக் கொண்டிருந்தால் ஒரு போதும் தீர்வு காண முடியாது. நாளைய சமூகத்தினருக்கு இந்த பிரச்சினைகளை மீதமாக்க வேண்டாம். பாராளு மன்ற உறுப்பினர் சாணக்கியன், சுமந்திரன் உங்களி டம் குறிப்பிடுகிறேன் .இந்த பிரச்சினைக்கு நாம் தீர்வு காண்போம்.

புலம்பெயர் அமைப்புக்களின் தலைவர்களுக்கு வெளிப் படை தன்மையுடன் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்துள்ளேன். நாட்டை முன்னேற்றுவோம். நாம் இலங்கையர்கள் என வெளிநாடு களில் குறிப்பிடுவது வெட்கமாகவுள்ளது. பிரச்சினைகளுக்கு ஒன்றிணைந்து தீர்வு கண்டு கௌரவமான சமூகம் என்பதை உறுதி ப்படுத்துவோம். பொருளாதாரத்தை மேம்படுத்துவ துடன் தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்றார்.

## காலிமுகத்திடல் போராட்டம் வடக்கு கிழக்கைப் பிரிக்கவாம்!

## இனவெறி விஷபாம்புகள் உள்ளவரை பிரச்சனைகள் தீராது!

சிறிலங்காவில் அரச கட்டமைப்பை வீழ்ச்சியடையச் செய்து, வடக்கு கிழக்கை பிரிப்பதே காலி முகத்திடல் போராட்டத்தின் பின்னணி என தேசிய சுதந்திர முன்ன ணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவசன்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் 27 யூலை 2022 நடைபெற்ற அவ சரகால சட்டம் மீதான விவாதத்தில் பங்கேற்று உரை யாற்றியஅவர் அரசைவீழ்த்தும் திட்டத்தின் பின்னணி யில் அமெரிக்கவே உள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளார். இதன்போது மேலும் உரையாற்றிய அவர்



இந்த போராட்ட களத்தில் இருப்போர், ஐக்கிய நாடு கள் சபையிடம் சென்று சர்வதேச தலையீட்டை கோரி யுள்ளனர். தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வெளிநாட்டிற்கு சென்று, வடக்கு கிழக்கிற்கு வெளிநாட்டு படையினரை கோரி யுள்ளார். இவ்வாறு நடந்தால், அதற்கு இடமளித்தால், இன்னும் சில நாட்களில் வடக்கில் உள்ள இராணுவ முகாமிற்கு சென்று, அனைத்தையும் அகற்றிக் கொண்டு செல்லுங்கள் எனக் கூறுவார்கள்.

நான் ஆவணமொன்றை சமர்ப்பிக்கின் றேன். அமெரிக்காவின் சி.ஐ.ஏ நிறுவனத்துடன் இணைந்த என்.ஈ.டி என்ற ஜனநாயகத்திற்கான தேசிய நன்கொடை நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனம் 100 நாடுகளில் இயங்குகின்றது. 2020 ஆம் ஆண்டு மாத்திரம் நீதி மற்றும் சமூக விடயங்களை அடிப்படையாக கொண்டு ஒரு இலட்சத்து 72 ஆயிரத்து 670 டொலரை வழங்கியுள்ளது. மாற்றுக் கொள்கைளுக் கான மத்திய நிலையத்திற்கு 02 இலட்சத்து 85 ஆயிரம் டொலர் நிதியை கடந்த 2020 ஆம் ஆண்டு குறித்த நிறுவனம் வழங்கியுள்ளது. யு.எஸ் அய்ட், சி.எஸ்.ஐ, ஆர்.ஓ.எல் போன்ற செயற்திட்டங்களுக்கும் அமெரிக்க நிதி உதவிகளை வழங்கியுள்ளது. இந்த நிதி சிறிலங்கா சட்டத்தரணிகள் சங்கம் ஊடாக வழங் கப்பட்டுள்ளது.

இராணுவத்திற்கு அருகில் சென்று நீங்கள் யுத்தக் குற்றங்களை செய்திருப்பீர்கள் என கூறுகின்றனர். உங்களை விட பிரபாகரன் சிறந்தவர் என கூறுகின்ற னர். இந்த இராணுவத்தை இவ்வாறு கூற முடியுமா? அனைத்து நேரங்களிலும் மக்களுடன் இருக்கும் இராணுவத்திற்கும் (18ம் பக்கம் பார்க்க)

# ரணில் ராஜபக்ஷாகளின் பிரதிநிதி ஆனாலும் தமிழர் பிரச்சனை பற்றிப் பேசத் தயார் என்கிறார் சம்பந்தர்!



தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்களின் ஆணைபெற்ற தரப்பு என்ற அடிப்படையில் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தயாராகவே உள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

மக்களால் விரட்டியடிக்கப்பட்ட ராஜபக்ஷக்களின் பிரதிநிதியாக ரணில் விக்கிரமசிங்க புதிய இடைக்கால ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டமையாலேயே நாம் அவரை ஆதரிப்பதில்லை என்ற தீர்மானத்தினை எடுத்திருந்தோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவின்றி புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவாகியுள்ள நிலையில் கூட்டமைப்பின் அடுத்தக்கட்ட அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களில் பெருவாரியானவர்கள் எமக்கு ஆணை அளித்துள்ளார்கள். அவர்கள் நீண்டகாலமாக போராடி வரும் தமது அபிலாஷைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். அந்த மக்களின் ஆணை பெற்றவர்கள் என்ற அடிப்படையில் நாமும் அந்த நிலைப்பாட்டில் பற்றுறுதியுடன் செயற்பட்டு வருகின்றோம். முயற்சிகளை மேற்கொள்கின்றோம்.

அந்த வகையில், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொறுப்புக்கூறல் உள்ளிட்ட மிக முக்கியமான விடயங்கள் தொடர்பில் நாம் புதிய ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேச்சுக்களை மேற் கொள்வதற்கு தயாராகவே உள்ளோம். ஆனால் எமது அபிலாஷைகளைப் பெற்றுக் கொள்வதற்கான கொள்கைகளை, அடிப்படைக் கோட்பாடுகளை விட்டுக் கொடுக்க முடியாது என்பதில் திடமாகவே உள்ளோம். இந்த விடயத்தில் மாற்றமில்லை என்றார்.

இதேவேளை, ரணில் விக்கிரசிங்கவுக்கு ஆதரவு அளிக்காத நிலையில் அவருடன் பேச்சுக்களை முன்னெடுப்பது சாத்தியமாகுமா என்று வினவியபோது, புதிய இடைக்கால ஜனாதிபதி தெரிவின் போது நாம் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்திருக்கவில்லை. இந்த நாட்டில் மக்கள் தன்னெழுச்சியாக ஒன்றுகூடி கோட்டாபய அரசாங்கத்திற்கு எதிராக போராட்டத்தினை தொடர்ச்சியாக நடத்திக் கொண்டு இருக்கின்றார்கள். இந்தப் பின்னணியில் தான் முதலில் மஹிந்த ராஜபக்ஷவும் பின்னர் பஷில் ராஜபக்ஷவும் இறுதியாக கோட்டாபய ராஜபக்ஷவும் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தினை ராஜபக்ஷக்களின் முழுமையான ஆதரவுடன் தான் ரணில் விக்கிரமசிங்க நிரப்புவதற்கு தயராகியிருந்தார். ஆரம்பத்தில் பிரதமர் பதவியைப் பெற்றுக் கொண்டவர் பின்னர் பதில் ஜனாதிபதியாகி தற்போது ஜனாதிபதியாகியுள்ளார். இது அரசியலமைப்பு முறையாக நடைபெற்றிருந்தாலும், தார்மீக அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முடியாது. ஏனெனில் மக்களின் விருப்புக்கு எதிரானதொரு செயற்பாட்டிற்கு நாம் துணை போக முடியாது. அது மட்டுமன்றி எமது கொள்கைகளுக்கு முரணாகவும் செயற்பட முடியாது. அந்த அடிப்படையில் தான் ராஜபக்ஷக்களின் பிரதிநிதியாக ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவினை தெரிவிக்கும் முடிவினை நாம் எடுத்திருக்கவில்லை. அவர் ஜனாதிபதி பதவியில் அமர்ந்தால் ராஜபக்ஷக்களின் கை மீண்டும் ஓங்கி விடும் என்பதால் அப்பதவியை ரணில் பெற்றுக்கொள்வதை தடுக்கும் முகமாக அவருக்கு எதிராக களமிறங்கிய வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் தீர்மானத்தினை எடுத்தோம். அந்த வகையில் எமது நிலைப்பாடு சரியானது என்றே கருதுகின்றேன்.

ரணிலுக்காக நீதிமன்றம் சென்றிருக்கின்றீர்களே? தற்போது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ள நீங்கள் 2018ஆம் ஆண்டு அவருக்காக நீதிமன்றத்திற்கு சென்றிருந்தீர்கள் அல்லவா? என்று வினா எழுப்பிய போது அதற்கு பதிலளித்த சம்பந்தன், ஆம் நாம் 2018ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கி, மஹிந்த ராஜபக்ஷவை அப்பதவிக்கு ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன நியமித்தமைக்கு எதிராக நீதிமன்றம் சென்றிருந்தோம்.

ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன, அரசியலமைப்புக்கு முரணாக செயற்பட்டு மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வந்திருந்தார். ஆகவே, அரசியலமைப்புக்கு முரணான செயற்பாட்டை தடுத்து நிறுத்துவதற்கும், ஜனநாயகத்தினை பாதுகாப்பதற்காகவும் நாம் நீதிமன்றம் சென்றிருந்தோம். அதனை விடுத்து தனிநபர்களை அடிப்படையாக வைத்து நாம் நீதிமன்றத்தினை நாடியிருக்கவில்லை. ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதாக இருந்தால் அரசியலமைப்புச் சட்டங்கள் உட்பட சட்ட ஆட்சி முறையாக பின்பற்றப்பட வேண்டியது அவசியமாகும் என்றார்.



SRI MUTHUMARI AMMAN PRASANNA
ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST
Pandit: VISHNU MURTHY
Face Reading, Palm Reading
Horoscope Reading, Date of Birthh





SOLUTIONS & SUGGESTIONS:
Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.
Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob.
Vasthu Prob
Real Estate
and all other Problems

100% Guarantee




Private & Confidential

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசிகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

Specialist in Bringing Back Loved ones

OPEN 7 DAYS
10 AM - 8 PM

Call: 647-390-7388

379 Albion Rd, Unit 1A, Etobicoke, ON, M9W 3P4
Major Intersection: ALBION RD & ELMHURST DR.

# போராட்டங்களை ஒடுக்க ரணில் வகுக்கும் உபாயம்

கட்டுரையாளர்:- யாழ்ப்பாணத்தில் இருந்து
**- பார்த்தீபன் -**

இலங்கையில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தக் காரணமாக இருந்த கோட்டா கோ கம போராட்டக்காரர் களில் முன்னணி செயற்பாட்டாளரான ஒருவர் டுபாய் செல்லவதற்காக சிறி லங்கன் விமானத்தில் ஏறிய பின்னர் சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டு பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்ட காட்சியை நாட்டு மக்கள் அனை வரும் அதிர்ச்சியுடன் பார்த்தார்கள்.

விமானத்திலிருந்த பயணிகள் பலர் இந்த சம்பவத்தை தமது கைப்பேசி களில் பதிவு செய்து உடனடியாகவே பகிர்ந்திருந்தார்கள். விமானப் பயணி களிலும் பலர் இந்தக் கைதை எதிர்த் தார்கள். ஆனால், எதனையிட்டும் கவலைப்படாமல் குண்டுக ்கட்டாக கைதான தனிஸ் அலி என்ற அந்த முன்னணி செயற்பாட்டாளர் விமான த்திலிருந்து சி.ஐ.டி. அதிகாரிகளால் இறக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் இரண்டு செய்திகளை வெளிப்படுத்துகிறது. முதலாவது - போராட்டக்காரர்களை வேட்டையாடுவ தற்கு ரணில் விக்கிரமசிங்க தனது படைகளை களத்தில் இறக்கியுள்ளார் என்பது.

இரண்டாவது - போராட்டத்தில் சம்பந் தப்பட்ட அனைவரது தகவல்கள்களும் முழுமையாக திரட்டப்பட்டு அவர்கள் சி.ஐ.டி.யினரால் பின் தொடரப்படு கின்றார்கள் என்பது.

இதன் மூலம் இந்தப் போராட்டம் மேலும் தொடர்வதற்கு இடமளிப்ப தில்லை என்பதில் ரணில் தெளிவாக இருக்கின்றார். ஜனநாயகத்தின் மீது கருத்துச் சுதந்திரத்தின் மீது தனக்கி ருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்த வும், தனது லிபரல் முகத்தைப் பாது காக்கவும் போராட்டத்தை நடத்துவ தற்கு தடை இல்லை என அவர் கூறி வருகின்றார். ஆனால், அதற்கென ஒரு இடத்தை ஒதுக்கி - அதற்குள் அதனை முடக்கி பலவீனப்படுத்து வது அவரது உபாயமாகவுள்ளது. அதனால் தான் வீரமகாதேவி பூங்கா வில் அதற்கென ஒரு இடம் ஒதுக்கப் படும் என அவர் அறிவித்திருந்தார்.

இதனைவிட மற்றொரு விடயமும் இதில் கவனிக்கத்தக்கது. முக்கிய செயற்பாட்டாளர்களைக் கைது செய் யும் போது வெறுமனே பிடிவிறாந்தை காண்பித்து அவர்களை கைது செய்வதற்குப் பதிலாக - அதனை ஒரு திறில் காட்சியாகச் செய்வதன் மூலம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்த ரணில் முற்படு கின்றார்.

தனிஸ் அலியை கைது செய்ய வேண்டுமானால் விமான நிலையத்து க்கு அவர் சென்ற போதே கைது செய் திருக்க முடியும். அல்லது வீட்டில் வைத்து கைது செய்திருக்க முடியும். ஆனால் விமானத்தில் ஏற விட்டு விமானம் புறப்படத் தயாரான போது திடுதிடுப்பென அதில் ஏறி கைது செய்வது என்பது அதிகளவுக்கு போராட்டக்காரர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தும் உத்தியாகும்.

இதே போன்ற ஒரு பாணியில் தான்



அந்தோனி வெரங்க புஸ்பிக என்ற மற்றொரு முன்னணி செயற்பாட்டாளர் புதன்கிழமை கைது செய்யப்பட்டார். காலிமுகத்திடலில் இடம் பெற்ற ஆர்ப் பாட்டத்தில் கலந்து கொண்டு பேருந் தில் திரும்பிக் கொண்டிருந்த அவர், கோட்டை பகுதியில் வைத்து நீல நிற ஜீப் வாகனத்தில் வந்த இனந்தெரியாத குழுவினரால் வலுக் கட்டாயமாக கடத்திச் செல்லப்பட்டாரென சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகி யிருந்தன.

எனினும் அவர் கடத்தப்பட்ட செய்தி யில் உண்மையில்லை என குற்றப் புலனாய்வுத் துறையின் கொழும்பு தெற்கு பிரிவு பொறுப்பதிகாரி பின்னர் தெரிவித்தார். அவரை பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் அவர் கோட்டை பொலிஸாரால் அவர் நீதி மன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என்றும் தெரிவித்தனர்.

வடக்கு கிழக்கில் செயற்பாட்டாளர் களையும் ஊடகவியலாளர்களையும் ஒடுக்குவதற்காக கையாண்ட அதே உபாயத்தைத்தான் ரணில் அரசாங்கம் இப்போது தென்பகுதிகளிலும் கையாள முற்படுகின்றது. இது மக்களைப் பீதியில் ஆழ்த்துவதையும், போராட்ட ங்களிலிருந்து மக்களை விலகிச் செல்லவைப்பதையும் இலக்காகக் கொண்ட ஒரு உபாயம்.

பாதுகாப்புத் தரப்பினர், அதிகாரிகள் இப்போது ரணிலுக்கு சார்பாக மாறி விட்டார்கள் - அல்லது மாற்றப்பட்டு விட்டார்கள் என்பதையும் இந்தச் செய்திகள் உணர்த்துகின்றன. கோட் டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது அவரால் கூட நாட்டி லிருந்து வெளியே செல்ல முடியாத நிலை இருந்தது.

ஜீலை 12 இரவு அவர் டுபாய் செல்வ தற்காக விமான நிலையம் வந்தபோது விமான நிலைய குடிவரவு - குடிய கல்வுப் பகுதி அதிகாரிகள் ஒத்துழை க்க மறுத்தனர். அதனால் கோட்டாபய தமது பயணத்தை கை விட்டு திரும்பிச ்சென்றார். இதே நிலைமை பஸிலுக்கு ராஜபக்சவுக்கும் ஏற்பட்டது.

ஆனால், இப்போது விமானத்தில் ஏறிய ஒரு முன்னணி போராட்ட செயற் பாட்டாளரை கைது செய்வதற்காக



சி.ஐ.டி.யினர் சென்ற போது விமான நிலைய அதிகாரிகள் அதற்கு ஒத்து ழைத்தார்கள். பயணிகள் சிலர் கைதை எதிர்த்த போதிலும் அதனைத் தடுக் கும் அளவுக்கு அது பலமானதாக இருக்கவில்லை.

ஆக, படையினர், பொலிஸார், அதிகாரி கள் என அனைத்துத் தரப்பினரையும் ரணில் தன்னுடைய கட்டுப்பாட்டு க்குள் கொண்டு வருவதில் வெற்றி பெற்று விட்டர் என்பதைத் தான் இது உணர்த்துகின்றது. கோட்டாபய ராஜ பக்சவைப் பொறுத்தவரையில் அதிகாரி கள், படைத்தரப்பினர் அவரது இறுதி க்காலத்தில் அவருக்கு முழுமையாக ஒத்துழைக்கவில்லை. அதனால், நாட்டைவிட்டுத் தப்பியோடுவதற்கு கூட கோட்டா பெரும் சிரமத்தை எதிர் கொண்டார் என்பது வாசகர்களுக்குத் தெரியும்.

ரணிலைப் பொறுத்தவரையில் ஜனாதி பதிப் பதவியில் அவர் இருக்கப் போவது இன்னும் இரண்டு வருடங் களும் சில மாதங்களும் தான். அதற் குள் பொருளாதார நெருக்கடிக்கு ஓரளவுக்காவது தீர்வை அவர் கொண்டு வந்தால் மட்டும் தான் அவ ருக்கும் அவரது கட்சிக்கும் எதிர் காலம் இருக்கும். பொருளாதார நெரு க்கடியை ஓரளவுக்காவது தணிப்பத ற்கு நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம்.

'ரணில் கோ ஹோம்' என போராட்டக் காரர்கள் தொடர்ந்தும் பேரணிகளை நடத்தி போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தால் அரசியல் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்த முடியாது. அதற்காகத்த ான் அவர் இப்போது கைகளில் சவுக்கை எடுத்திருக்கின் றார்.

ரணில் ஜனாதிபதியாக பதவியேற்ற அன்றிரவே காலிமுகத்திடலில் பாரிய படை நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டு பல பகுதிகளிலிருந்தும் போராட்டக்காரர்கள் துடைத்தெறியப் பட்டார்கள். இந்த நடவடிக்கைகூட ஒரு அராஜகமான - அதிகளவுக்குப் படைப் பலத்தைப் பயன்படுத்திய நடவடிக்கையாகத்தான் இருந்தது. அதற்கு உள்நாட்டிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் கண்டனங்கள் குவிந்தன. ரணில் எதனையிட்டும் கவலைப்படவில்லை. கண்டனம் தெரி வித்த வெளிநாடுகளின் தூதுவர் களையே நேரில் அழைத்து தனது செயற்பாட்டை அவர் நியாயப்படுத் தினார்.

மேற்கு நாடுகள் அவருக்கு ஆதரவாக இருந்தாலும் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டு மானால் இந்தப் போராட்டங்கள் முடிவு க்குக் கொண்டு வரப்பட வேண்டும் என அவர் கருதுகின்றார்.

அதேவேளையில் ரணிலைப் பொறு த்தவரையில் அவர் ஒரு ஜனநாயக வாதி. லிபரல் போன்ற கருத்துக்கள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் உள்ளது. அதனையும் பாதுகாத்துக் கொண்டு போராட்டங்களையும் ஒடுக் குவதற்கான வியூகங்களைத்தான் அவர் வகுத்துக் கொண்டிருக்கின்றார். பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத் துக்கு புதன்கிழமை கிடைத்த அங்கீ காரம் இந்த வகையில் அவருக்கு பலம் சேர்க்கின்றது. இதனைக் கொண்டு அவர் என்ன செய்யப் போகி ன்றார் என்பதை பொறுத்திருந்து பார்ப் போம்.

# பெத்தும் கெர்னர் கைது!

பத்தரமுல்லை, பொல்துவ சந்தியில் இடம் பெற்ற ஆர்ப் பாட்டத்திற்கு தலைமை தாங்கியதாக கூறப்படும் சமூக ஆர்வலர் பெத்தும் கெர்னர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்த போதிலும், அவர் சுகயீனமுற்றிருப்ப தாக சட்டத்தரணி ஊடாக கடிதம் சமர்ப்பிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். ஜீலை 13 ஆம் திகதி அவர் பத்தரமுல்ல பொல்துவ சந்திக்கு அருகில் தங்கி மக்களை அந்த இடத்திற்கு வருமாறு பல்வேறு வழிகளில் அறிவித் தார். பாராளுமன்றத்தின் பாதுகாப்புக்காக பயன்படுத்தப் பட்ட வீதித் தடைகளை உடைக்கும் பணியில் அங்கிரு ந்த மக்களுடன் இணைந்து செயற்பட்டதாகவும் தெரி விக்கப்படுகிறது.

இதேவேளை காலி முகத்திடல் கோட்டா கோ ஹோம் ஆர்ப்பாட்டத்தில் முன்னிலையாக தொடர்ந்து செயற்பட்டு வரும், அமில ஜீவந்த பீரிஸ் பாதிரியாரை கண்டவுடன் கைது செய்யும்படி உயர் மட்டத்தில் இருந்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறி விசேட பொலிஸ் குழு



இரத்தினபுரியில் அவர் தங்கியிருந்த தேவாலயமொன்றில் சோதனை நடத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

10 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவணைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளுக்கு பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

23 யூலை 2022 முதல் 29 யூலை 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ் வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-

ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்துரை கந்தையா

மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை கந்தையா அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 27 யூலை 2022 புதன்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்துரை கந்தையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராஸேஸ்வரி செல்வராஜா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராஜேஸ்வரி செல்வராஜா அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 30 யூலை 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் மகள் யசோதரா பரமேஸ்வரன் அவர்கள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார். திருமதி இராஜேஸ்வரி செல்வராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி விநாசித்தம்பி தங்கம்மா

புங்குடுதீவு 10ம்வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 21வது ஆண்டு நினைவு நாள் 28 யூலை 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்

சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை

அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)

அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு

சைவக்குருக்களை

தொடர்பு கொள்ளவும்

"இணுவில் திருவூர்"

சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்

647.629.5468

msvkurukkal@gmail.com

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




19 யூலை 2022 கனடாவில் வசிக்கும் திரு மருதப்பு நவரத்தினம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக திரு மருதப்பு நவரத்தினம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து 23 யூலை 2022 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




24 யூலை 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோமநாத் துர்க்கா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜேரியான் சோமநாத்தின் 8வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் ஜேரியான் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




26 யூலை 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி நிஷா சபாரட்ணம் அவர்களின் பிறந்த நன்நாளாகும். அன்றைய செல்வி நிஷா சபாரட்ணம் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




27 யூலை 2022 புதன்கிழமை ஆடிஅமாவாசை விரத உபயமாக ஊழெவைச் சேர்ந்த திரு சின்னப்பு நல்லையா அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




27 யூலை 2022 புதன்கிழமை மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை கந்தையா அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




28 யூலை 2022 வியாழக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 21வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





## அன்பு இல்லக் குழந்தைகளின் வாழ்வுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 10வது ஆண்டு நிறைவின் இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும் 12 நவம்பர் 2022 சனிக்கிழமை

வீடு மற்றும் வாகன காப்புறுதி

# HOME & AUTO INSURANCE

வீடு — HOME
வாகனம் — AUTO
மோட்டர் சைக்கிள் — MOTOR CYCLE
படகு — BOAT
கனரக வாகனம் — TRAILER

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்





TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
THUSHANTHAN RAVINDRAN
647-401-2653



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**
Fax: 416.439.0226


www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



உ
சிவமயம்

# அருள்மிகு ரொறன்ரோ திருச்செந்தூர் முருகப்பெருமான் ஆலய

## சுபகிருது வருட மகோற்சவ விஞ்ஞாபனம் - 2022



சகலவளங்களும் ஒருங்கே அமையபெற்ற ஒன்ராறியோ மாகாண நோர்த் யோர்க் நகரத்தில் கோவில் கொண்டு வேண்டுவோருக்கு வேண்டும் வரத்தை அள்ளிக் கொடுக்கும் திருச்செந்தூர் முருகனுக்கு நிகழும் சுபகிருது வருடம் ஆடிமாதம் 20ஆம் நாள் 04/08/2022 வியாழக்கிழமை சுக்லபட்ச ஷப்தமி திதியும் சுவாதி நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் கொடியேற்றத்துடன் பதினொரு தினங்கள் பிரமோற்சவம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. பக்தர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு எம்பெருமான் திருவருளை பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**துவஜாரோகணம் (கொடியேற்றம்)**
காலை 7:00 மணிக்கு கும்பபூஜை
9:00 மணிக்கு விஷேடபூஜை
9:30 மணிக்கு வசந்த மண்டப பூஜை
11:00 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்)
04-08-2022 வியாழக்கிழமை

**தேர்த்திருவிழா**
13-08-2022 சனிக்கிழமை காலை
5:00 மணிக்கு ஆலய பூஜை 05:30 மணிக்கு கும்பபூஜை
07:00 மணிக்கு விஷேட பூஜை
8:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை
நண்பகல் 10:00 மணிக்கு இரத ஆரோகணம்
13-08-2022 சனிக்கிழமை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொடியேற்றம் | 04-08-2022 | வியாழக்கிழமை | சப்பறம் | 12-08-2022 | வெள்ளிக்கிழமை |
| தேர்த் திருவிழா | 13-08-2022 | சனிக்கிழமை | தீர்த்தம் | 14-08-2022 | ஞாயிற்றுக்கிழமை |
| பூங்காவனம் | 15-08-2022 | திங்கட்க்கிழமை | வயிரவர் மடை | 16-08-2022 | செவ்வாய்க்கிழமை |

**உற்சவகால பூஜை நேரங்கள்**

காலை
08:00 மணிக்கு ஆலய பூஜை
08:30 மணிக்கு சங்கல்ப்பம், கும்பபூஜை, அபிஷேகம்
10:00 மணிக்கு ஆலய பூஜை
11:30 மணிக்கு வசந்தமண்டப பூஜை

மாலை
05:30 மணிக்கு அபிஷேகம்
07:00 மணிக்கு ஆலய பூஜை
08:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை

இங்ஙனம் ஆலய அறங்காவலர் சபை

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்

# Toronto Thiruchendur Murugan Temple

19 Penn Dr, North York, ON M9L 2A7. Tel: 416-744-9568

சுபம்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases






Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி
கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி
ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC® Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth





TAX CENTRIC

2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு
அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph



- ❑ Personal Tax
- ❑ Corporate Tax
- ❑ Book Keeping & Accounting
- ❑ Payroll Services
- ❑ GST/HST Filing
- ❑ Corporate Services
- ❑ Business Startup
- ❑ Financial Planning

## Gayatiri Thavan
Tel: **289.569.0169** • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
**www.taxcentric.ca**

# ரணில் கடைசி ஆளா?

நாடாளுமன்றத்தில் தனது கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய ஒரே ஒரு உறுப்பினர். அதுவும் தேர்தலில் தோற்றதால் தேசியப் பட்டியல் மூலம் உள்ளே வந்தவர். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இது ஆசியாவின் அதிசயம் மட்டுமல்ல உலகத்தின் அதிசயமும் தான்.

தாமரை மொட்டுக்குத் தலைமை தாங்கும் யானைக்கும், யானைக்குத் தலைமை தாங்கும் தாமரை மொட்டுக்கும் இடையிலான போட்டியில் யானை ஜெயித்திருக்கிறது. எனவே அது எல்லா விதத்திலும் தாமரை மொட்டுக்குக் கிடைத்த வெற்றி தான். இரகசிய வாக்கெடுப்பு என்பது திருடர்களுக்கு வசதியானது. அரகலய போராட்டக்காரர்கள் கூறுவது போல, திருடர்களே வெற்றியைத் தீர்மானித்திருக்கிறார்கள்.

ரணிலை முன்னிறுத்தியதன் மூலம் ராஜபக்சக்கள் தங்களை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பாதுகாத்துக் கொண்டு விட்டார்கள். இது முதலாவது வெற்றி. இரண்டாவது வெற்றி, போராட்டத்தைப் பிசுபிசுக்கச் செய்யலாம் என்பது. பதவியேற்ற அடுத்தநாளே ரணில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதலைத் தொடுத்திருக்கிறார்.

எனினும் இது ஒரு முழுமையான முறியடிப்பு நடவடிக்கை அல்ல. ஒருவிதத்தில் குறியீட்டு வகைப்பட்ட எச்சரிக்கை எனலாம். ஜனாதிபதி செயலகத்தின் முன்பகுதியைக் கைப்பற்றி வைத்திருந்த ஆர்ப்பாட்டக்காரர்களே அகற்றப்பட்டிருக்கிறார்கள். அதேசமயம் கோட்டா கோகம கிராமத்தைச் சேர்ந்த கூடாரங்கள் பெருமளவுக்கு அகற்றப்படவில்லை.

ஜனாதிபதி செயலகத்தை சில தினங்களில் கையளிக்கப் போவதாக போராட்டத்தில் ஈடுபடும் தரப்புகள் சமூக வலைத்தளங்களில் அறிவித்திருந்தன என்றும் நள்ளிரவுத் தாக்குதலை அவர்கள் எதிர்பார்க்கவில்லை என்றும் தெரிகிறது.

இது கிட்டத்தட்ட ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தை ஒத்தது. தமிழகத்தில் நடந்த ஜல்லிக்கட்டு போராட்டத்தில் தமது பிரதான கோரிக்கைகள் வென்றெடுக்கப்பட்டபின் அந்த வெற்றியின் உற்சாகத்தால் புதிய கோரிக்கைகளை முன் வைத்து ஒரு தரப்பு தொடர்ந்து போராட்டக் களத்தில் நின்றது. மிஞ்சி நின்ற அந்தத் தரப்பை தமிழக அரசு பலத்தை பிரயோகித்து துரத்தியது.

எனினும் காலி முகத்திடல் போராட்டம் சற்று வித்தியாசமானது. போராட்டக்காரர்களின் கோரிக்கைகள் முழுமையாக வெற்றி பெறவில்லை. ரணிலை முன்னிறுத்தி ராஜபக்சக்கள் தப்பி விட்டார்கள். அது மட்டுமல்ல போராட்டத்தின் இறுதி வெற்றியைத் தடுக்கும் ஒருவராக ரணில் ஜனாதிபதியாக மேலெழுந்து விட்டார். ராஜபக்சக்களை பிரதியீடு செய்யும் ரணிலை அகற்றுவதற்காக தொடர்ந்து போராடப் போவதாக போராட்டக்காரர்கள் கூறுகிறார்கள்.

ஏற்கனவே தன்னுடைய வீடு எரிக்கப்பட்டதாலும், தனக்கு மிகவும் விருப்பத்துக்குரிய வளர்ப்பு நாய் கொல்லப்பட்டதாலும், ரணில் தனிப்பட்ட முறையில் மனமுடைந்து காணப்பட்டவர். நள்ளிரவுத் தாக்குதலை ஊக்குவித்த காரணிகளில் அதுவும் ஒன்றா?

போராட்டங்களின் பின்னணிகள் மேற்கு நாடுகள் நின்றன. சில விமர்சகர்கள் கூறுவது போல மேற்கத்திய தூதுவர்கள் போராட்டத்திற்கு நிதியுதவி வழங்கினார்கள் என்ற சூழ்ச்சிக் கோட்பாட்டை இக்கட்டுரை நியாயப்படுத்தவில்லை. ஆனால் போராட்டங்களுக்கு மேற்கத்திய தூதரகங்களின் ஆசீர்வாதம் இருந்தது. இப்பொழுதும் ரணில் விக்ரமசிங்கவின் முறியடிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக மேற்கு நாடுகள், கொழும்பில் உள்ள ஜநா தூதரகம் போன்றன கருத்துத் தெரிவித்துள்ளன. ஆனால் முன்பு ராஜபக்சவுக்கு எதிராக பயன்படுத்திய கடுமையான வார்த்தைகளை இம்முறை பயன்படுத்தவில்லை.

இது தான் அரசியல். சீனாவுக்கு விசுவாசமான ராஜபக்சக்களை ஆட்சியில் இருந்து அகற்றும் வரை போராட்டக்காரர்



களைத் தடவித் தடவி உற்சாக மூட்டினார்கள். ராஜபக்சக்கள் அகற்றப்பட்ட தன் விளைவாக மேற்கிற்கு விசுவாசமான ரணில் ஜனாதிபதியாகி விட்டார். இப்பொழுது எந்தப் போராட்டங்களை மேற்கு ஆசீர்வதித்ததோ,அதே போராட்டங்களை அவர்களுடைய விசுவாசியை வைத்துக் கையாள வேண்டிய ஒரு நிலை.

போராட்டங்களின் இதயமாகக் காணப்பட்ட இடதுசாரி மரபில் வந்த ஜேவிபி, முன்னிலை சோசலிசக் கட்சி, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் போன்றவற்றை மேற்குநாடுகள் இந்தியா போன்றன எச்சரிக்கை உணர்வோடு தான் அணுகின. இடதுசாரிப் பாரம்பரியத்தில் வந்த தரப்புகள் இலங்கைத்தீவின் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதையோ அல்லது தீர்மானிக்கும் சக்திகளாக வருவதையோ மேற்கு நாடுகளும் அனுமதிக்காது, இந்தியாவும் அனுமதிக்காது. எனவே ரணிலுக்கு எதிரான அரகலயவை ஏதோ ஒரு விதத்தில் முறியடிக்க வேண்டிய தேவை மேற்குக்கும் உண்டு.

அரகலயவை நீர்த்துப் போகச் செய்வதும் பொருளாதார நெருக்கடிகளை தற்காலிகமாகத் தணிப்பதும் ஒன்று தான். ஏனென்றால் பொருளாதார நெருக்கடிகளின் காரணமாகத் தான் அரகலய தோற்றம் பெற்றது. எனவே பொருளாதார நெருக்கடிகளை தற்காலிகமாக வேனும் வெற்றிகரமாகக் கையாண்டால், நடுத்தர வர்க்கத்தின் கொதிப்பையும் கோபத்தையும் தணிக்கலாம். ரணில் பதில் ஜனாதிபதியாக வந்த கையோடு அந்த மாற்றத்தைக் காட்ட விளைந்தார். எரிவாயு கிடைக்க தொடங்கியது, எரிபொருள் வரத் தொடங்கியது, மின்வெட்டு நேரம் குறைக்கப்பட்டது.

ரணில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் ஐ.எம்.எஃப் வெளியிட்ட அறிக்கையும் மத்தியவங்கி ஆளுநர் தெரிவித்த கருத்துக்களும் அந்த வகையிலானவை தான். மத்தியவங்கியின் ஆளுநர் இப்பொழுது கூறுகிறார் 5 மாதங்களுக்குள் நிலைமை தேறிவிடும் என்று. ஆனால் சில கிழமைமைகளுக்கு முன் ரணில் கூறினார், பொருளாதாரத்தை நிமிர்ந்துவதற்கு குறைந்தது நான்கு ஆண்டுகள் தேவை என்று ஐ.எம்.எஃப் கூறியதாக.

அதிலும் குறிப்பாக முதலாவது ஆண்டு மிக நெருக்கடியான ஆண்டாக அமையும் என்றும் அவர் எச்சரித்திருந்தார். ஆனால் இப்பொழுது மத்திய வங்கியின் ஆளுநர் கூறுகிறார் நாலைந்து மாதங்களில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும் என்று. மொத்தத்தில் ரணிலைப் பலப்படுத்துவதற்காக மேற்குநாடுகளும் ஐ.எம்.எஃப்பும் இலங்கைத்தீவை நோக்கி உதவிகளைப் பாய்ச்சத் தொடங்கி விட்டன. பங்குச் சந்தையும் அண்மை நாட்களில் மாற்றத்தைக் காட்டுகிறது. ரணிலை பலப்படுத்துவது தான் அவர்களுடைய ஒரே குறிக்கோள். ரணிலை பலப்படுத்துவதென்றால் பொருளாதாரத்தை தற்காலிகமாகவேனும் நிமிர்த்த வேண்டும். பொருளாதாரத்தை தற்காலிகமாக நிமிர்த்தி விட்டால் போராட்டத்திற்கான காரணங்கள் வலுவிழுந்து விடும். எனினும் போராடும் தரப்புகளுக்கு அதிர்ச்சி கொடுக்க வேண்டும் என்று ரணில் சிந்திப்பதாகத் தெரிகிறது. இத்தாலிய அறிஞரான க்ரொம்சி கூறுவது போல நாடாளுமன்றம், ஜனநாயகம் என்றெல்லாம் வெளித் தோற்றத்துக்குக் காட்டப்படும். ஆனால் அரசுக்கு ஆபத்து என்று வரும் போது நாடாளுமன்றத்தின் பின் மறைந்து நிற்கும் ராங்கிகள் வெளியில் வரும். அது தான் கடந்த வியாளன் நள்ளிரவு நடந்ததா?

பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதும் ரணில் காயப்பட்ட படையினரை மருத்துவமனைக்குச் சென்று பார்த்ததும், ஜனாதிபதியாக வந்ததும் படைத்தரப்பைச் சந்தித்ததும் அதைத் தான் காட்டுகின்றன. அதாவது ராஜபக்சக்கள் ரணிலை ஒரு முன் தடுப்பாக முன் நிறுத்தியதன் மூலம் தமது இரண்டாவது இலக்கையும் அதாவது அரகலயவைத் தோற்கடிப்பது என்ற விடயத்தில் வெற்றி பெறத் தொடங்கி விட்டார்களா?

ரணில் பதில் ஜனாதிபதி ஆகியதும் போராட்டக்காரர்கள் உஷார் அடைந்தார்கள். ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் பாசிச சக்திகள் உண்டு என்று அவர் கூறினார். எனவே அரகலய தன்னை தற்காத்துக் கொள்ள முற்பட்டது. ஏற்கனவே அவர்கள் கட்சித் தலைவர்களை சந்திக்கத் தொடங்கி விட்டிருந்தார்கள். ஜனாதிபதி தேர்தலையொட்டி கட்சிகளுடன் சந்திப்பை வேகப்படுத்தினார்கள். அவர்கள் ஒரு புதிய கட்சியை உருவாக்கப் போவதாகவும் ஓர் அறிவிப்பு வந்தது. ஆனால் அது போராட்டத்துக்குள் ஊடுருவிய சிலரின் பொய்யான அறிவிப்பு என்று போராடும் அமைப்புகள் தெரிவிக்கின்றன. ராஜபக்சக்கள் ரணிலை முன்னிறுத்தியதும் அரகலய முன்னெச்சரிக்கை உணர்வோடு தற்காப்பு நிலைக்குச் செல்லத் தொடங்கியது. எந்த அரசியல் கட்சிகளை போராட்ட களத்தில் அனுமதிக்க மறுத்தார்களோ, அதே கட்சிகளை அவர்கள் சந்தித்தார்கள். எந்த மக்கள் பிரதிநிதிகளை அவர்கள் திருடர்கள் என்று விழித்தார்களோ அவர்களைச் சந்தித்தார்கள்.

எனினும் அரகலயவின் முன்னெச்சரிக்கையோடு கூடிய தற்காப்பு நடவடிக்கைகளை மீறி ரணில் தாக்குதலைக் கொடுத்திருக்கிறார். ராஜபக்சக்கள் செய்யத் துணியாத ஒன்றை அவர் செய்திருக்கிறார். ஏனென்றால் ராஜபக்சக்களின் பலம் உள்நாட்டில் சிங்கள பௌத்த பெருந்தேசியவாத உணர்வு தான். அவர்கள் எப்பொழுதும் உள்நாட்டில் பலமான தலைவர்கள். வெளியரங்கில் பலவீனமானவர்கள். அதனால், உள்நாட்டில் எதிர்ப்புகள் கிளம்பியதும் அவர்களுடைய சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத் தளம் ஆட்டங்காணத் தொடங்கியது.அரகலயவின் பின்னணியில் மேற்குநாடுகள் நிற்பதும் அவர்களுக்குத் தெரியும். எனவே தப்பிச் செல்வதைத் தவிர ராஜபக்சங்களுக்கு வேறு தெரிவு இருக்கவில்லை. ஆனால் ரணிலின் விடயத்தில் நிலைமை வேறு. அவர் உள்நாட்டில் மிகவும் பலவீனமானவர். வெளியரங்கில் மிகப் பலமானவர். மேற்கு நாடுகள் மத்தியில் அவருக்கு கவர்ச்சி அதிகம். அந்தத் துணிச்சல் காரணமாகத்தான் அவர் அரகலயவின் மீது கை வைத்திருக்கிறார்.


கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

ஆனால் இது ஒரு விஷப்பரீட்சை. ஏனெனில் அரகலியவின் பின்னணியில் இடதுசாரி மரபில் வந்த ஏற்கனவே பலமான நிறுவனக் கட்டமைப்புகளை கொண்டுள்ள, அமைப்பு களும் கட்சிகளும் உண்டு.

ஏற்கனவே இரு தடவை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு தோற்கடிக்கப்பட்ட அனுபவம் உண்டு. பலமான தொழிற் சங்கங்கள் உண்டு. இவற்றின் தொகுக்கப்பட்ட விளைவாக ரணிலை அவர்கள் எப்படி எதிர் கொள்வார்கள் என்று பார்க்க வேண்டும். ரணில் இப்பொழுதும் உள்நாட்டில் பலவீனமான தலைவர் தான்

பொருளாதார நெருக்கடிகளை தற்காலிகமாகத் தணிப்பதன் மூலம் அரகலியவை இல்லாமல் செய்யலாம் என்று ரணிலும் மேற்கு நாடுகளும் சிந்திக்கும். ஆனால் முறைமை மாற்றத்தை கேட்டு அரகலய புதிய வடிவம் எடுக்குமாக இருந்தால் அது நாட்டின் அரசியல் ஸ்திரத் தன்மையை பாதிக்கும்.

இதைப் பொழிவாகச் சொன்னால், ரணில் அரகலயவை எப்படிக் கையாள போகிறார் என்பது தான் நாட்டின் அடுத்தகட்ட அரசியலைத் தீர்மானிக்கப் போகின்றது. அரகலயவின் விளைவாகத் தான் அவருக்கு இப்படி ஒரு வாய்ப்பே கிடைத்தது. இக்கட்டுரை எழுதப்படும் கணம் வரையிலும் அரகலயவவின் வெற்றிக் கனிகளை ரணில் தன்னுடைய சட்டப்பைக்குள் போட்டுக் கொண்டு விட்டார்.

நாடாளுமன்றத்தில் தாமரை மொட்டுக் கட்சி தொடர்ந்தும் பலமாகக் காணப்படுகிறது. அதனால் மாற்றத்தைக் கேட்கும் மக்களுக்கு ஒரு தோற்ற மாற்றத்தைக் காட்டும் ஒரு உத்தியாக அரசியல் சங்கீதக் கதிரை விளையாட்டை அக் கட்சி கடந்த மூன்று மாதங்களாக விளையாடி வருகிறது.

இந்த சங்கீதக் கதிரையில் கடைசியாக அமர்த்தப்பட்டவர் தான் ரணில்.ஆனால் அது தான் சங்கீதக் கதிரை விளையாட்டின் கடைசிக் கட்டம் என்று எடுத்துக் கொள்ள தேவையில்லை.

கிரேக்கத்தில் பொருளாதார நெருக்கடிகளின் போது ஐந்து ஆண்டுகளுக்குள் ஏழு தடவைகள் அரசாங்கம் மாறியது.

இலங்கைத்தீவில் கடந்த சுமார் இரண்டரை ஆண்டு காலப் பகுதிக்குள் ஒன்பது தடவைகள் அமைச்சரவை பகுதியளவோ அல்லது முழுமையாகவோ மாற்றப்பட்டிருக்கிறது.

ஐந்து நிதி அமைச்சர்கள் வந்து விட்டார்கள்.

மூன்று பிரதமர்கள் வந்து விட்டார்கள்.

ஒரு புதிய ஜனாதிபதியும் வந்து விட்டார். இது தான் கடைசி மாற்றமா இதற்குப் பின்னரும் மாற்றங்கள் இடம் பெறுமா என்பதனை ரணிலுக்கும் அரகலயவுக்கும் இடையிலான மோதல் தான் தீர்மானிக்கப் போகிறதா?

Friends MATRIMONY

உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...

10,000க்கு மேற்பட்ட வரன்கள் கையிருப்பில்!

10,000+



இலங்கைத் தமிழர்களுக்கான உலகளாவிய திருமண இணையத்தளம்.

மணமகள் தேவை

அமெரிக்காவில் வசிக்கின்ற 47 வயது வேளாளர், Bachelors degree, Computer Engineer தொழில் புரியும் மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

மணமகள் தேவை

Poland வசிக்கின்ற 29 வயது வேளாளர், PHD level தொழில புரியும மணமகனுக்கு கனடாவில் பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

மணமகள் தேவை

கனடாவில வசிக்கின்ற 30 வயது வேளாளர், Bachelors degree, Group leader புரியும் மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.


- 416 477 6854
  416 477 2259
  647 709 1536

Mon to Fri
10AM to 7PM
Sat
1PM to 7PM

- GTA Square- 5215 Finch Ave. E. Unit 257
- friendsmatrimonym@gmail.com

www.friendsmatrimony.com





OM SIVA SHAKTHI ASTROLOGER CENTER



MASTER: KASHI GURUJI

OVER 40+ YEARS OF EXPERIENCE

அனைத்து மதத்தினரும் வரவேற்கப்படுகிறார்கள்.
Black Magic Removal in 24hours.
100% முடிவு உத்தரவாதம்.
வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு.
PRIVATE & CONFIDENTIAL
7 நாட்களும் திறந்திருக்கும்.
Call for Appointment

கைரேகை, எண்ஜோதிடம், ஜாதகம் விளக்கம், வெத்திலையில் மை போட்டுப் பார்த்தல், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி அறிதல்.

Specialist in bringing backloved ones.

- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை
- சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு
- பிள்ளைகளின் திடீர் குணமாற்றங்கள்
- லட்சுமி கடாட்சம், வாகனம், மனைப் பொருத்தம்
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்
- விசா பிரச்சனைகள், கோர்ட் வழக்கு
- ஆரோக்கியம், செய்வினை கோளாறு
- தொழில், மனை அபிவிருத்தி, முன்னேற்றம்
- பேய், பிசாசு, எதிரிகள் தொந்தரவு
- கண் திருஷ்டி, நாக தோசம் போன்ற

சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டு.
உடனே பண்டித் காசி குருஜியை சந்திக்கவும்.



647-324-9991 | 437-833-7796

Unit 16-2857 Lawrence Ave East
Scarborough, ON M1P 2S8

2891 A Derry Road East
Mississauga, ON, L4T 1A6



Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

*At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



Vilosanan Sivatharman
Funeral Director
416-993-0826

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

*Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# போராட்டங்களில் மாற்றம் தேவை

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



இலங்கையில் பெரிதாக எதிர்பார்க்கப்பட்ட நம்பப்பட்ட காலிமுகத்திடல் போராட்டம் (**Galle face Revolution**) அப்படியே சுருங்கி விட்டதா என்ற கேள்வி எழுந்துள்ளது.



ஏனென்றால் மிகப் பெரிய எழுச்சியைக் கொண்ட **Galle face Revoluation** யாருமே எதிர்பார்த்திராத வகையில் ராஜபக்ஸவினரை அதிகாரத்திலிருந்து அகற்றியது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியில் அசைக்கவே முடியாது என்றிருந்த கோட்டபாயவை நாட்டை விட்டே ஓட வைத்தது.

ஆனாலும் இறுதியில் அது மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை பிரமராக்கி, இப்பொழுது ஜனாதிபதியாக்கியுள்ளது. எதிர்பார்த்திராத பொருத்தமற்றவருக்கு பெரிய பரிசை அளித்திருக்கிறது. இதற்கு ஒரு வகையில் (எதிர்பாராத விதமாக) **Galle face Revoluation** இந்தப் போராட்டம் மறைமுகப் பங்களிப்பைச் செய்துள்ளது என்றே சொல்ல வேண்டும். இதற்குப் பரிசாக பொருத்தமற்றவருக்குக் கிடைத்த அதிகாரத்தினால் — அது (**Galle face Revolution**) பெரிய தண்டனையையும் உடனடியாகவே பெற்றுள்ளது.

ஆம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, உடனடியாக (24 மணி நேரத்துள்) இந்தப் போராடத்தினர் மீது கடுமையான படை நடவடிக்கையை ஒடுக்குமுறையை மேற்கொண்டுள்ளார். இதனால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். ஒன்பது பேர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களைப் பிணையில் சட்டத்தரணிகள் அமைப்பு மீட்டுள்ளது. இதன்போது பி.பி.ஸி செய்தியாளர் உள்பட வேறு சில ஊடகவியலாளர்களும் தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளனர்.

ராஜபக்ஸவினரே செய்யாத செய்யத் துணியாத காரியத்தை ரணில் விக்கிரமசிங்க செய்திருக்கிறார். ரணிலின் இயல்பும் வழிமுறையும் அது தான். எந்தப் போராட்டத்தையும் மிகச் சாதாரணமாக ஒடுக்கி விடுவார். மக்கள் எழுச்சியோ, போராட்டமோ, எதிர்ப்போ அவர் விரும்பாத, ஏற்காத ஒன்று. இதற்கு வாய்ப்பாக அவருக்கு இப்பொழுது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியும் கிடைத்துள்ளது. விடுவாரா சும்மா?

எதிர்பார்க்கப்பட்டது கட்டமைப்பு மாற்றம் (**Seystem Change**). இலங்கைக்கு வேண்டியதும் அதுதான். இதையே இலங்கையின் அமைதியைக் குறித்தும் எதிர் காலத்தைக் குறித்தும் சிந்திப்போரும் வலியுறுத்துகின்றனர். சர்வதேச சமூகத்தின் விருப்பமும் இதுதான். இதை அது தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது. முக்கியமாக இலங்கையின் பன்மைத்துவத்தை உறுதி செய்யுமாறு. அதற்கேற்ற வகையில் அரசியலமைப்பை மாற்றுமாறு.

இப்போதுள்ள அரசியலமைப்பு, பௌத்த சிங்கள முதன்மைவாதத்தையே அடிப்படையாகக் கொண்டது. பௌத்தத்துக்கே முன்னுரிமை என்று அழுத்தமாக எழுதப்பட்டது. இந்த அரசியலமைப்பே நடைமுறையில் உள்ளது. இதனால்தான் ஏகப்பட்ட பிரச்சினைகளும் இன முரண்பாடுகளும் உள்ளன. அத்துடன் தனியொரு மனிதருக்கு எல்லையற்ற அதிகாரத்தைக் குவித்துள்ள நிறைவேற்ற அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறையையும் நீக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக உள்ளது. இதை ரணில் விக்கிரமசிங்கவும் கடந்த காலத்தில் வலியுறுத்தி வந்துள்ளார். இதெல்லாம் பல்லின மக்களைக் கொண்ட இலங்கைக்குப் பொருத்தமானவை அல்ல. இந்த மாற்றங்களும் திருத்தங்களும் நிகழாமல், நிகழ முடியாமல் இருப்பதே இலங்கையின் நெருக்கடிக்கும் சிதைவுக்கும் காரணம்.

இப்பொழுது அதிகாரத்துக்கு வந்துள்ள ரணில் விக்கிரமசிங்க, லிபரல் ஜனநாயகவாதி என்று கருதப்படுகின்றவர் கொண்டாடப்படுகின்றவர். புதிய மாற்றங்களைக் கோருகின்றவர். குறிப்பாக பாராளுமன்றத்துக்கு அதிகாரத்தைக் கோரியவர். மாற்றங்கள் வேண்டும் என்றவர்.

ஆனாலும் இதை இனி அவர் ஏற்றுக்கொள்வாரா என்பது சந்தேகமே. ஏனென்றால் இப்போது அவர் நிறைவேற்று அதிகாரமுடைய பதவிக்கு வந்துவிட்டார். அதன் அதிகார எல்லைகளை ருசிக்காமல் அதை அவர் சுருக்கிக்கொள்ள விரும்ப மாட்டார். அப்படி அதிகாரத்தை இழக்க விரும்பும் மன நிலையுடையவரல்ல ரணில். கடந்த காலத்தில் பட்டலந்த படுகொலை, இன ஒடுக்குமுறை அரசியலின் பொறுப்பில் (பிரமராக) இருந்தவர் என்ற குற்றச்சாட்டுகள் இருந்தாலும் ஒப்பீட்டளவில் ரணிலினுடைய அணுகுமுறைகள் பொதுப்பரப்பில் கவர்ச்சிகரமானவையே.

குறிப்பாக மேற்குலக வட்டாரங்களில் ரணிலுக்குப் பெரிய மதிப்பும் மரியாதையும் உண்டு. ஒன்று அவர் வெளிப்படையான கடும் போக்குவாதி இல்லை என்பது. இரண்டாவது மேற்குலகின் நண்பராக, அதனுடன் நிபந்தனைகளற்று ஒத்துழைக்கக்கூடிய தலைவர் என்பது. மூன்றாவது ஜனநாயகத்தை அதிகம் விரும்புகின்றவர்,அதைப் பலப்படுத்துவதற்கான வழிமுறைகைளைக் குறித்து யோசிப்பவர் என்பது.

இந்தச் சூழலில் இலங்கையின் எதிர்காலம் எப்படியிருக்கும்? ரணில் தலைமையிலான ஆட்சியின் செயற்பாடுகள் எத்தகையனவாக அமையும். காலிமுகத்திடல் (**Galle face Revolution**) போராட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் எப்படி அமையும்? எப்படி அமைய வேண்டும் என்பதைக் குறித்துச் சிந்திப்பது அவசியமாகும்.

போராட்டத்தை முன்னெடுத்தோரின் இலக்குகளில் பாதி இப்பொழுது நிறைவேறி விட்டது. முக்கியமாக ராஜபக்ஸவினர் நேரடியான அரசியல் அரங்கிலிருந்து (முன்னரங்கிலிருந்து) அகற்றப்பட்டுள்ளனர். ஆனாலும் அவர்கள் (மகிந்த ராஜபக்ஸ, சமல் ராஜபக்ஸ, நாமல் ராஜபக்ஸ, ஷசிந்திர ராஜபக்ஸ) பாரளுமன்றத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். கட்சி ரீதியாகவும் அவர்களுடைய பொது ஜன பெரமுனவே பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு அதுவே மறைமுகப் பங்களிப்பையும் செய்துள்ளது. இதற்கு நேரடிக் காரணம், பாராளுமன்றத்தில் நிலவும் சீரழிந்த அரசியல் நடத்தைகளாகும். அது அரசியல் வணிகத்துக்கும் அதற்குத் தோதான பேரங்களுக்கும் கீழ்ப்படிந்தது. எனவே தான் இதையெல்லாம் மாற்ற வேண்டும் என்று போராடிகள் கோரி வந்தனர்.

ராஜபக்ஸவினரை அதிகாரத்திலிருந்து அகற்றிய கையோடு பாராளுமன்றத்தை முற்றுகையிட்ட போராளிகள், மக்களின் மன உணர்வுகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ற மாதிரிப் பாராளுமன்றம் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தனர். ஆனாலும் அதை மீறியே ரணில் தெரிவு செய்யப்பட்டுள்ளானர்.

ரணிலை போராளிகள் மட்டுமல்ல மக்களும் பாராளுமன்றத்தில் உள்ள அரசியற் தரப்பினரும் கூட ஏற்றவர்களில்லை. ஆனாலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் 134 பேர் அவரைத் தெரிவு செய்து வெற்றியடைய வைத்துள்ளனர்.

மாற்றத்தை (**System Change**) செய்ய முடியாத நிலையில் தான் இந்த நாடும் போராட்டத் தரப்பும் (**Galle face Revolution**) இன்னும் இருக்கின்றனர் என்று தெரிகிறது. இதனால் தான் இப்பொழுது அவர்கள் (**Galle face Revolution**) அரச ஒடுக்குமுறைக்குள்ளாக வேண்டி வந்தது. இதற்குப் பிரதான காரணம், இந்தப் போராட்டத்தில் (22ம் பக்கம் பார்க்க)



# உண்மைகள் உறங்காது

கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகிய பின்னர், அல்–ஜசீரா ஊடகத்துக்கு கருத்து வெளியிட்ட ராஜபக்ஷ குடும்பத்துக்கு நெருக்கமானவர்கள், கோட்டாவின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம், அவரது அணுகுமுறை தான் என்று குற்றம் சாட்டியிருந்தனர்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், அவர் தவறானவர்களால் தவறான ஆலோசனைகளால் வழி நடத்தப்பட்டார் என்றும், பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைகளை கேட்காமலேயே முடிவுகளை எடுத்தார் என்றும், அதுவே அவரது நிலைக்கு காரணம் என்றும் அவர்கள் கூறியிருந்தனர்.

ஆனால், கோட்டாவின் பதவி விலகலுக்குப் பிறகு பொதுஜன பெரமுன வெளியிட்ட ஒரு அறிக்கையில், அவர் பதவி விலகிச் செல்லும் நிலை ஏற்பட்டதற்கு, கொரோனா பரவலும், உக்ரேன் நெருக்கடியும் தான் முக்கிய காரணம் என்று கூறப்பட்டிருந்தது.

கொரோனாவும், உக்ரேன் நெருக்கடியும், ஒரு உலகளாவியப் பிரச்சினை என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இந்த இரண்டும் பல நாடுகளை, நாடுகளின் பொருளாதாரங்களை வீழ்த்தியிருக்கின்றன. ஆனால் இந்த நெருக்கடியையும் தாண்டி பல நாடுகள் வளர்ச்சியை கண்டிருக்கின்றன.

குறிப்பாக பங்களாதேஷ் பொருளாதாரம் வளர்ந்து செல்வதை, இந்தியப் பிரதமர் மோடி சில நாட்களுக்கு முன்னர் வியப்புடன் குறிப்பிட்டிருந்தார்.

கொரோனா மற்றும் உக்ரேன் நெருக்கடிகளைத் தாண்டி பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் திறன் தான், நாடுகளின் முக்கியமான தேவையாக எதிர்பார்க்கப்படுகிறது.

கோட்டா அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர், பல நாடுகளின் எதிர்க்கட்சிகள், தங்களின் நாட்டுக்கும் இதுபோன்று நடக்கலாம் என்று எச்சரித்திருக்கின்றன.

இந்தியா, பாகிஸ்தான், மலேசியா என பல நாடுகளில் இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளது. அது போல, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றனவும், இலங்கையைப் போன்ற நிலை வேறு பல நாடுகளுக்கும் ஏற்படலாம் என்று எச்சரித்திருக்கின்றன. இது பொதுவானதொரு கணிப்புத் தான்.

இதே போன்ற எச்சரிக்கை, ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற சில மாதங்களில், கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் விடுக்கப் பட்டது.

பொருளாதார நிலை மோசமாக உள்ளதால், நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி வரும் என்று, நிதியமைச்சின் அதிகாரிகள் அவரையும் அவரது அமைச்சரவையையும் எச்சரித்திருந்தார்கள்.

அப்போது நிதியமைச்சராக இருந்தவர் மஹிந்த ராஜபக்ஷ. ஆனால், அந்த எச்சரிக்கையை கோட்டாபய ராஜபக்ஷ சரியாக கவனத்தில் கொண்டிருந்தால், பொருளாதாரச் சரிவுகளில் இருந்து முழுமையாக இல்லா விட்டாலும், ஓரளவுக்காவது தப்பியிருக்கலாம்.

கோட்டாபய ராஜபக்ஷவின் தோல்விக்கு பிரதான காரணம், தவறான முடிவுகளை எடுத்தது மட்டுமல்ல, சரியான முடிவுகளைக் கூட, அவர் தவறான நேரத்தில் எடுத்திருந்தார்.

பசுமை விவசாயம் தொடர்பாகவும், உரத்துக்கான இறக்குமதி தடை தொடர்பாகவும், சீனி உள்ளிட்ட சில பொருட்களுக்கான வரிக் குறைப்புகள் போன்றன தொடர்பாகவும், எடுக்கப்பட்ட முடிவுகள் பொருளாதாரத்தில் பாரிய தேக்கத்தை ஏற்படுத்தியது.

ஏற்றுமதி வருவாய் குறைந்து சுற்றுலாத் துறை வீழ்ச்சியடைந்திருந்த போது, இறக்குமதியைக் கட்டுப்படுத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருந்த போது, பசுமை விவசாயத்தை நோக்கிய கொள்கையை செயற்படுத்தியது முட்டாள்தனமான முடிவாக அமைந்தது.



பசுமை விவசாயத்தை நோக்கி நகரும் போது உற்பத்தி வீழ்ச்சியடையும் என்பதை கல்வியறிவில்லாதவர்களால் கூட புரிந்து கொள்ள முடியும். ஆனால் அந்த முடிவை கோட்டாபய ராஜபக்ஷ, எந்த முன்யோசனையும் இல்லாமல் எடுத்தார். நிறைவேற்று அதிகாரம் கையில் உள்ளது என்ற தற்துணிவு, அவருக்கு அந்த முடிவை எடுக்கும் துணிச்சலைக் கொடுத்தது.

கோட்டாபய ராஜபக்ஷவைச் சுற்றியிருந்த பெரும்பாலான அமைச்சர்களும், செயலாளர்களும், ஆலோசகர்களும் அவரை தவறான வழிக்கு வழி நடத்துகின்றவர்களாகத் தான் இருந்தனரே தவிர, சரியான ஆலோசனைகளை வழங்குபவர்களாக இருக்கவில்லை.

ராஜபக்ஷ குடும்பத்துக்கு நெருக்கமான உதயங்க வீரதுங்க போன்றவர்கள், கோட்டாபய ராஜபக்ஷ, ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் எதிர்காலத்தையே சிதைத்து விட்டார் என்று அண்மையில் கொதிப்பை வெளியிட்டிருக்கிறார்கள்.

அவர், மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைகளைப் புறக்கணித்தார் அல்லது, அவரது ஆலோசனைகளை கேட்காமலேயே முடிவுகளை எடுத்தார் என்று குறைபட்டுக் கொண்டுள்ளனர்.

இது அண்ணன் –தம்பி என்ற உறவுகளுக்கு அப்பால், அதிகாரத்தைப் பெறுகின்ற போது ஏற்படும் உரசலை வெளிப்படுத்தியிருக்கிறது.

அதிகாரத்தைக் கையில் பெற்றுக் கொடுத்த மஹிந்த, தன் கையைப் பிடித்து தான், கோட்டா அரசியலில் நடை பழக வேண்டும் என்று எதிர்பார்த்தார்.

ஆரம்பத்தில் கோட்டா அவ்வாறு நடந்து கொண்டிருந்தாலும், காலப் போக்கில் தன்னிடம் நிறைவேற்று அதிகாரம் இருக்கும் போது எதற்கு, அண்ணனின் ஆலோசனை என்று புறக்கணித்துச் செயற்படத் தொடங்கினார்.

அப்போதே, அவர்களுக்குள் விரிசல்கள் விழத் தொடங்கி விட்டன. இரண்டு அதிகார மையங்கள் இருக்கும் போது, உருவாகின்ற பிரச்சினை தான் இது.

ஆனால் நாங்கள் ஒற்றுமையானவர்கள் என்று இருவரும்– கஷ்டப்பட்டுக் காட்டிக் கொள்ள முயன்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தை, இரண்டு தரப்புகளுக்கும் இடையில் இருந்த சக்திகளும் பயன்படுத்திக் கொண்டன என்பதையும் மறுக்க முடியாது.

கோட்டா தனது அதிகாரத்தை சரியாகப் பயன்படுத்தியிருந்தால், நியாயமான முறையில் செயற்படுத்தியிருந்தால், கோவிட்டையும், உக்ரேன் போரையும், ஏனைய பல நாடுகளைப் போலவே இலங்கையும் வெற்றிகரமாக கடந்து செல்லக் கூடிய நிலையை ஏற்படுத்தியிருக்கும். ஆனால் கோட்டா தனியானதொரு பாதையில் தான் தனது பயணம் நடக்கும் என்று எதிர்பார்த்தார். இராணுவப் பாணியிலான தனது முடிவுகளில், வேறெவரும் குறுக்கிடுவதை விரும்பவில்லை.

அவரது அந்த முடிவுக்கு காரணமாக இருந்தது, தூய சிங்கள பௌத்த தேசியவாதமும், அதனைச் சார்ந்து அவர் பெற்றிருந்த வெற்றியும் தான்.


கோட்டாவின் வெற்றிக்கு மட்டுமன்றி தோல்விக்கும் அவரது அந்த அணுகுமுறையே முக்கிய காரணம். அமெரிக்காவில் தூய வெள்ளையினத் தேசியவாத பிரசாரத்தை ஆயுதமாக்கி ஆட்சிக்கு வந்த டொனால்ட் ட்ரம்ப், அதே கொள்கையை செயற்படுத்திய தன் மூலம், அமெரிக்க மக்களின் வெறுப்புக்குள்ளானார்.

ட்ரம்பின் வெற்றியை முன்னோடியாக கொண்டு, அவரைப் போலவே தன்னாலும் பாரம்பரியமற்ற அரசியல்வாதியாக எழுச்சி பெற முடியும், ஆட்சியைப் பிடிக்க முடியும் என்று கோட்டா ஆரம்பத்திலேயே நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

ட்ரம்பின் கொள்கைகளை கையாண்ட அவர், தமிழ் மக்களை ஒதுக்கினார். முஸ்லிம்களுடனும், முரண்பட்டார். சிங்கள பௌத்த தேசியவாத பெருந்தலைவராக எழுச்சி பெற ஆசைப்பட்ட அவர், அவர்களாலேயே துரத்தப்பட்டிருக்கிறார்.

ட்ரம்பின் தோல்விக்குப் பின்னர் கோட்டா பாடம் கற்றிருக்க வேண்டும். அவர் தனது உத்திகளை மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். அவருக்குள் இருந்த தூய சிங்கள

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



பௌத்த தேசியவாத உணர்வு அதற்கு இடமளிக்கவில்லை.

தமிழர்களை நோக்கியோ, முஸ்லிம்களை நோக்கியோ வளைந்து கொடுக்க இடமளிக்கவில்லை.

கோட்டா ஆட்சிக்கு வந்ததை அமெரிக்கா ஒரு நல்ல சகுனமாகவே பார்க்கவில்லை. அவர் ஆட்சிக்கு வந்த பின்னர் கொழும்பு வந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ, தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் அனைத்து மக்களுக்குமான ஜனாதிபதியாக இருப்பேன் என்று கோட்டாபய ராஜபக்ஷ வாக்குறுதி அளித்திருக்கிறார். அந்த வாக்குறுதிப் படி அவர் நடந்து கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கிறது” எனக் குறிப்பிட்டிருந்தார்.

பொம்பியோவின் அந்தக் கருத்துக்குள் ஆழமானதொரு அரசியல் செய்தி புதைந்து கிடந்தது. அதனை கோட்டா புரிந்து கொள்ளவில்லை. ட்ரம்ப் எவ்வாறு தூக்கியெறியப்பட்டாரோ அந்த நிலைக்கு கோட்டா தள்ளப்படக் கூடாது என்பதையே, பொம்பியோ மறைமுகமாக கூறிச் சென்றிருந்தார்.

எல்லா மக்களுக்குமான ஜனாதிபதியாக நடந்து கொள்வேன் என்று கூறிய கோட்டா, ட்ரம்பைப் போலவே, எல்லா மக்களாலும் வெறுக்கப்படுகின்றவராக மாறி விட்டார்.

கோட்டாவின் தோல்விகளுக்கு பல அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன. அவற்றை புறக்கணித்துக் கொண்டு, ராஜபக்ஷ தரப்பினரும், மொட்டு தரப்பும் தங்களுக்கு வசதியான காரணங்களை கூற முற்படுகின்றன. அவர்கள் எப்படித் தான் மூடி மறைத்தாலும், உண்மைகள் நீண்ட காலம் உறங்காது.

# காலிமுகத்திடல் போராட்டம் வடக்கு கிழக்கைப் பிரிக்கவாம்! இனவெறி விஷபாம்புகள் உள்ளவரை பிரச்சனைகள் தீராது!

7ம் பக்கத் தொடர்ச்சி) தற்போது தடையை ஏற்படுத்துகின்றனர். இராணுவத்தின் வீடுகளை கண்டறிந்து தீ வைக்க வேண்டும் என ஒரு மூதாட்டி கூறுகின்றார். இதன் மூலம் உளவியல் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இது அரசை வீழ்த்துவதற்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை.

ஒரு கட்சியின் தலைவர் கூறுகின்றார் அரசியலமைப்பு க்கு புறம்பாக அதிகாரத்தை உருவாக்க வேண்டும் என. அது சிறந்ததாக இருக்கும். இதுவே மறை முகமாக இருக்கும் நிகழ்ச்சி நிரல். அரசை வீழ்த்தி, அநீதியான அதிகாரம் உருவாக்கப்படும். நாடு வீழ்ச்சி அடையும். அதன்பின்னர் வடக்கு கிழக்கை பிரிப்பார்கள். இதுவே திட்டம். இந்த திட்டத்திற்கு இடமளிக்க வேண்டாம். இந்த திட்டத்திற்கு இடமளிக்க கூடாது. அதற்காக ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாதுகாப்பு தரப்பினர் மற்றும் காவல்துறையினருக்கு ஒன்றை கூறுகின்றோம். அரசை பாதுகாக்கவும், அதற்காக முன் நிற்கவும். நீங்கள் எம்மை பாதுகாக்க வேண்டாம். அரசை வீழ்த்தும் திட்டத்தை முறியடியுங்கள். அதற்காக நாங்கள் உங்களுடன் இருப்போம் என்றார்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# ஈழத்தமிழர் அரசியலில் தந்திரோபாய வறுமை?

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பெரும்பாண்மை வாக்குகளால் தெரிவாகியிருக்கின்றார். அந்த வகையில் 'ஒப்பிரேசன் ரணில்' வெற்றி பெற்று விட்டது. இதனை சிலர் ராஜபக்சக்களின் வெற்றியென்று கூறலாம் ஆனால் இந்தக் கட்டுரையாளர் அப்படிக் கருதவில்லை.

ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாவதற்கான திட்டங்கள் மிகவும் கச்சிதமாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. கோட்டபாய ராஜபக்சவிற்கு எதிராக, கிளர்சிகள் அதிகரித்த போது, நிலைமைகளை சமாளிக்கும் ஒரு உக்தியாகவே ரணில் பிரதமராக நியமிக்கப்பட்டார். ஆனால் ரணில் பிரதமராக நியமிக்கப்பட்ட போதே ரணில் ஜனாதிபதியாவதற்கான திட்டம் ரணிலிடம் இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இது சாத்தியப்பட்டிருக்காது.

ரணில் பிரதமரான போதே, கோட்டபாயவினால் அதிக காலம் பதவியில் நீடிக்க முடியாதென்னும் விடயத்தை ரணில் கணித்திருக்க வேண்டும். கோட்டபாய விலகியதை தொடர்ந்து, ரணில் பதில் ஜனாதிபதியானார். 69 லட்சம் வாக்குகளால் வெற்றி பெற்ற ஜனாதிபதி ஒருவரின் வீழ்ச்சியை தொடர்ந்து, அதற்கு சமதையான வாக்குகளை பெற்றிருக்கும் 134 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் ரணில் ஜனாதிபதியாகியிருக்கின்றார். இப்போது ரணில் கேள்விகளுக்கு அப்பாற்றபட்டவர்.

இந்த விடயத்தை எவ்வாறு கையாளுவது என்பதில் தான், தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீண்டுமொரு முறை சறுக்கியிருக்கின்றது. யுத்தத்திற்கு பின்னரான கடந்த 13வருடங்களில், அரசியலை தந்திரோபாய ரீதியில் கையாளும் விடயத்தில் சம்பந்தன் தொடர்ந்தும் தோல்விகளையே சந்தித்திருக்கின்றார். தொடர் தோல்வியில் இப்போது புதிதாக சேர்ந்திருப்பது தான் டளஸ் அழகப்பெருமவை ஆதரித்த பிரச்சினையாகும்.

புதிய ஜனாதிபதிக்கான விடயம் விவாதத்திற்கு வந்த நாளிலிருந்தே, தமிழரசு கட்சியை தீர்மானிக்கவல்ல, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பொது வெளிகளில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நிலைப்பாடுகளையே முன் வைத்து வந்தார். சுமந்திரனின் தெரிவு சஜித ் பிரேமதாசவாகவே இருந்தது. ஆனால் சஜித் பிரேமதாச திடிரென்று போட்டியிலிருந்து விலகியதை தொடர்ந்து, ராஜபக்சக்களின் பொதுஜன பெரமுனவின் பொருளாளர் டளஸ் அழகப்பெருமவை ஆதரிக்கும் விவகாரம் சூடு பிடித்தது.

ஆனால் இதில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே மாறுபட்ட அப்பிராயங்கள் இருந்ததை தனிப்பட்டரீதியில் இந்தக் கட்டுரையாளர் அறிவார். இவ்வாறானதொரு சூழலில் தான், இதில் கூட்டமைப்பு எடுக்கக் கூடிய ஆகச் சிறந்த முடிவு தொடர்பில், இந்தக் கட்டுரையாளர் சில விடயங்களை வலியுறுத்தியிருந்தார். இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு கடிதமொன்றையும் அனுப்பியிருந்தேன்.

அதாவது, ஜனாதிபதி போட்டியிலிருந்து கூட்டமைப்பு விலகியிருப்பது தான், சரியானதென்று சுட்டிக்காட்டியிருந்தேன். இதன் மூலம் ஜனாதிபதியாக எவர் தெரிவு செய்யப்பட்டாலும் அவருடன் பணியாற்றுவதற்கு, புதிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இலகுவாக இருக்குமென்று வலியுறுத்தியிருந்தேன். ஆனால் வழமை போலவே, சம்பந்தனும் சுமந்திரனும் பழைய பாணியில் சிந்தித்து, விடயங்களை குழப்பினர்.

தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் சிவில் சமூகம் மற்றும் புத்திஜீவிகள் என்போர் ஒரு விடயத்தை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, நாம் என்ன வகையான அரசியலை மேற்கொள்கின்றோம்?

இந்தக் கேள்வியிலிருந்து தான் ஒவ்வொரு விடயங்களை பறறியும் சிந்திக்க வேண்டும். இன்று நாம் முன்னெடுக்கும் அரசியலானது, பிரதிநிதித்துவ ஜனநாயக அரசியலாகும். அதன் ஆற்றலுக்கு ஒரு எல்லையுண்டு.

அதாவது, தேர்தல்கள் மூலம் கிடைக்கப்பெறும் பிரதிநித்துவ பலத்தின் அடிப்படையில், பேரம்பேசி விடயங்களை வெற்றி கொள்வதை பற்றித் தான், நாம், இங்கு சிந்திக்க முடியும். இது ஒன்று தான், தற்போது தமிழர் களிடமுள்ள அரசியல் வறிமுறையாகும்.



இந்த வழிமுறையில் முன்னெடுக்கப்படும் அரசியலின் மூலம் வெற்றிகளை அடைய வேண்டுமாயின், தந்திரோபாயங்கள் மட்டுமே கைகொடுக்கும். அதே வேளை இங்கு வெற்றியென்பது முழுமையானதல்ல என்னும் புரிதலும் நம்மிடமிருக்க வேண்டும். எனவே பெறக் கூடியவைகளை பெறுவதென்பது தான் வெற்றியாகும். ஏனெனில், விடயங்கள் தோல்விடையும் போது, தமிழர் தரப்பில் அரசை, கீறங்கி வரச் செய்வதற்கான மாற்று வழிகள் இல்லை. எனவே முழுமையான அரசியல் வெற்றியென்பது தமிழர் அரசியலின் இலக்காக இருக்கவே முடியாது.

உதாரணமாக பேச்சுவார்த்தைகள் தோல்வியடைகின்ற போது, விடுதலைப் புலிகள் அந்தத் தோல்வியை இராணுவ வெற்றிகள் மூலமே சரி செய்து கொண்டனர். இதன் மூலம் மீளவும் அரசாங்கத்தை தங்களை நோக்கி வரவேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்தினர்.

இவ்வாறான அணுகுமுறை ஆயுதப் போராட்ட அரசியலில் மட்டுமே சாத்தியப்படும். ஜனநாயக அரசியலில் தந்திரோபாயங்கள் மூலம் மட்டுமே நலன்களை வெற்றி கொள்ள முடியும்.

யுத்தம் நிறைவுற்ற காலத்திலிருந்து, கூட்டமைப்பு, ஏனைய தமிழ் தேசிய சிறுகட்சிகள், தமிழ் சிவில் சமூகம், புலம்பெயர் அமைப்புக்கள் என, அனைவரும் பல்வேறு தளங்களில் இயங்கியிருகின்றனர். ஐ.நா மனித உரிமைகள் பேரவையை நோக்கி, இந்தியாவை நோக்கி பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்திருக்கின்றனர். இவைகள் எவையும் தந்திரோபாயங்கள் அல்ல. மாறாக, சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கான செயற்பாடுகள் மட்டுமே. ஒரு குறிப்பிட்டளவு அழுத்தங்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இவ்வாறான அழுத்தங்களின் ஊடாக, ஏதாவது வாய்ப்புக்கள் கிடைக்கும் போது, அதனை கச்சிதமாக பயன்படுத்திக் கொள்வது தான் அரசியல் தந்திரோபாயமாகும்.

ஏனெனில் சர்வதேச அழுத்தங்கள் என்பவை நிரந்தரமானதல்ல. அவை மாற்றமடையக் கூடியவை. கொழும்பின் ஆட்சியாளர்களின் அணுகுமுறைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்ற போது, சிறிலங்காவின் மீதான அழுத்தங்களும் மாற்றமடைந்து விடும். இந்த இடைப்பட்ட காலத்தில் கிடைப்பது தான் வாய்ப்புக்கள், அந்த வாய்ப்புக்களை திறம்பட கையாளுவதில் தான் தமிழர் அரசியலின் வெற்றி தங்கியிருக்கின்றது.

இந்த விடயங்களை தமிழர் தரப்புக்களால் புரிந்து கொள்ள முடியாமல் போகும் ஒவ்வொரு சந்தர்பங்களிலும், தமிழ் மக்களுக்கு வெறும் சுலோகங்கள் மட்டுமே மிஞ்சும்.

இப்போது மீண்டும் ஜனாதிபதி தெரிவு விவகாரத்திற்கு வருவோம். நான் முன்னர் குறிப்பிட்டது போன்று, ரணிலை எதிர்க்கும் நோக்கில் சிந்திக்காமல், வாக்கெடுப்பில் நடுநிலை வகிப்பதன் மூலம் ரணிலை எதிர்நிலைக்கு கொண்டுபோகாமல் இருந்திருக்கலாம். ஆனால் இந்த ஜனாதிபதி தெரிவின் போது, ஒரு வேளை ரணிலை ஆதரிக்கும் முடிவெடுத்திருந்தாலும் கூட, அது பிரச்சினைக்குரிய ஒன்றல்ல.

ஏனெனில், இரண்டு பக்கத்திலுமே மொட்டு அணியினரின் ஆதிக்கம்தான் மேலோங்கியிருந்தது. ஒரு புறம் மொட்டு உறுப்பினர்களின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்கவும் மறுபுறும் மொட்டு கட்சியின் சார்பில் டளஸ் அளகப்பெருமவும் போட்டியிட்டிருந்த நிலையில், கூட்டமைப்பிற்கு இதில் தலையீடு செய்ய வேண்டிய தேவையிருந்திருக்கவில்லை. ஓரளவு பொருத்தமானவர் என்னுமடிப்படையில் கூட்டமைப்பினர் வாக்களிக்க விரும்பியிருந்தால், ரணில் விக்கிரமசிங்கதான் கூட்டமைப்பினரின் தெரிவாக இருந்திருக்க முடியும்.

ஏனெனில், ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டமைப்பினர் முன்னர் இணைந்து பணியாற்றியிருந்தனர். இந்த பின்புலத்தில் ரணிலை ஆதிரிப்பதில் பெரிய அரசியல் சிக்கல்கள் இருந்திருக்கவில்லை. எனினும் கொள்கையடிப்படையில் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டிய தேவையிருந்திருப்பின் நடுநிலை வகிப்பதே ஒரேயொரு சிறந்த தெரிவாக இருந்தது. ஆனால் சம்பந்தனால் தந்திரோபாய ரீதியில் செயற்பட்டிருக்க முடியவில்லை.

ஏனெனில் அவ்வாறான அரசியல் ஆளுமை அவரிடம் இல்லை, அவரிடம் மட்டுமல்ல, தமிழ் சூழலிலேயே தந்திரோபாயம் தொடர்பான புரிதல் மிகவும் பலவீனமாகவே இருக்கின்றது. அரசியலை வெறும் உணர்வு ரீதியில் புரிந்து கொள்வதற்கே பெரும்பாலான தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் பழக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களை நெறிப்படுத்த வேண்டிய, புத்திஜீவிகள் மற்றும் கருத்துருவாக்கிகள் மத்தியிலும் தந்திரோபாய அரசியல் சார்ந்து ஆழமான புரிதல்கள் இல்லை. அவர்களில் அனேகரும் உணர்வு ரீதியாகவே விடயங்களை அணுக முற்படுகின்றனர். தாங்கள் முன் வைக்கும் கோரிக்கைகளை சிறிலங்கா ஏற்றுக் கொள்ளா விட்டால், அரசை இறங்கி வரச் செய்வதற்கான மாற்றுவழிகள் தொடர்பில் எவரும் பேசுவதில்லை. ஏனெனில் அவர்களுக்கு அது தெரியாது.

உதாரணமாக சிலர் இடைக்கால

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



அரசாங்கம் பற்றி கற்பனைகளை முன் வைக்கின்றனர். அதனை ஏற்றுக் கொள்ளா விட்டால் தமிழர் தரப்புக்கள் என்ன செய்யும்? விடுதலைப் புலிகள் பாணியில் தாக்குதலை தொடுப்பீர்களா? பொத்துவில் தொடங்கி பொலிகண்டி போன்ற நடவடிக்கைகளால் கொழும்மை இறங்கி வரச் செய்ய முடியாது.

ஏனெனில் வடக்கு கிழக்கில் இடம் பெறும் இது போன்ற நடவடிக்கைகளால் கொழும்பின் நிர்வாகம் முடங்கப் போவதில்லை. அண்மையில் இடம் பெற்ற சிங்கள இளைஞர்களின் பொருளாதார நெருக்கடி கோபம், எவ்வாறு கொழும்மை இறங்கி வரச் செய்தது என்பது ஒரு நல்ல உதாரணமாகும். அவ்வாறான ஒரு நடவடிக்கையை வடக்கு கிழக்கில் மேற்கொண்டிருந்தால், அது கொழும்பிலுள்ளவர்களுக்கு ஒரு புதினமாகவே இருந்திருக்கும்.

எனவே விடயங்களை தொகுத்து நோக்கினால் தந்திரோபாயரீதியில் தீர்மானங்களை எடுக்க வேண்டிய ஒவ்வொரு சந்தர்பங்களிலும், சம்பந்தன் இடறி விழுபராகவே இருந்திருக்கின்றார். இதற்கு என்ன காரணம்? சம்பந்தன் அரசியலில் காலாவதியாகி விட்டார். சம்பந்தன் மட்டுமல்ல இன்னும் பலரும் அவ்வாறான நிலையில் தான் இருக்கின்றனர்.

ஆனால் தமிழ் வாக்காளர்களின் அறியாமையும், ஞாபக மறதியும் அவ்வாறானவர்களை காப்பாற்றிக் கொண்டிருக்கின்றது. தந்திரோபாய அரசியலுக்கு முன்னுரிமையளிக்கின்ற, வெறும் உணர்ச்சிகர அரசியலுக்கு மயங்காத ஒரு புதிய தலைமுறை தமிழ் தேசிய அரசியலை கைப்பற்றாத வரையில், இவ்வாறான பழம் அரசியலில் எந்தவொரு மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

சில தினங்களுக்கு முன்னர் ஒரு சிங்கள சட்டத்தரணியோடு பேசிக் கொண்டிருந்த போது, அவர் ஒரு விடயத்தை குறிப்பிட்டார். அடுத்த தேர்தலில் குறைந்தது எழுபதிற்கு மேற்பட்ட புதியவர்கள், இளைஞர்கள், தெற்கில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வரக்கூடும் என்றார்.

கூடவே, தமிழ் பகுதியில் நிலைமையென்ன என்று கேட்டார். தமிழ் வாக்காளர்களை நம்பி எவ்வாறு பதிலளிக்க முடியும்?

# ஸ்டாலினின் தயக்கம்?

கட்டுரையாளர்:- தமிழகத்தில் இருந்து
- குடந்தையான் -

குடியரசு தலைவரால் நியமிக்கப்படும் மாநில ஆளுநர்கள், மக்களால் தேர்ந் தெடுக்கப்படும் அரசுக்கு ஆதரவாகவும், தேவையான ஆலோசனைகளை வழங்கி, அரசை செயல்படுவதற்கான பிரதிநிதி யாகத் தான் செயல்பட வேண்டும் என்பது வரையறுக்கப்பட்ட மரபு.

ஆனால் தமிழகத்திற்கு ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கும் ஆர்.என். ரவி தொடக்க காலத்திலிருந்தே, திராவிட சிந்தனைக்கு எதிரான.. பா.ஜ.க. வலியுறு த்தும் சனாதன தர்மம் குறித்த அரசி யலை, சிந்தனையை தொடர்ந்து பரப் புரை செய்யும் பிரசாரகராகத் தான் இயங்கி வருகிறார்.

அவர் பங்கு பற்றும் ஒவ்வொரு மேடை யிலும், தமிழகத்தில் நிலவி வரும் சமூக நல்லிணக்கத்திற்கு எதிராகவும், அதற்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலும், மத்திய அரசின் புதிய கல்விக் கொள் கையை அழுத்தம் திருத்தமாக ஆதரவு தெரிவித்தும் பேசி வருகிறார்.

கல்வி கற்கும் மாணவர்களிடையே பொறுப்பான பதவியில் இருக்கும் நபர் கள், அன்பை விதைக்கும் வார்த்தை களை தான் பயன்படுத்துவார்கள் என்பதும், தன்னம்பிக்கை ஊட்டும் விடயங்களையும், கதைகளையும், கருத்துகளையும் பேசி உற்சாகப்படுத்து வது என்பதும் தான் இதுவரை கடைபிடிக்கப்பட்டு வரும் மரபு.

ஆனால் ஆளுநர் ஆர்.என்.ரவி, ஆர்.எஸ். எஸ் இயக்கத்தின் சித்தாந்தத்தை மெல்ல மெல்ல ஒவ்வொரு மேடையிலும் தன்னு டைய பேச்சில் குறிப்பிட்டு பரப்புரை செய்து வருகிறார். அண்மையில் மதுரை காமராசர் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிலும் பங்கு பற்றி பேசிய போது, 'இந்தியாவை கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று ஆங்கி லேயர் பிரித்தனர். பின்பு வடக்கு ஆரியர் கள் என்றும், தென்பகுதியை திராவிடர் கள் எனக் கூறியும் பிரித்தனர். அதன் பிறகு பஞ்ச ஆரியர்கள், திராவிடர்கள் என்று பிரித்து, சுதந்திரப் போராட்ட த்தை நீர்த்துப் போக முயற்சி செய்தனர் எனக் குறிப்பிட்டார்.

அவரது பேச்சை விமர்சிக்கும் வரலா ற்று ஆய்வாளர்கள், இந்தியா என்பது ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு ஒன்று பட்ட தேசமாக இல்லை. பல நூற்றுக் கணக்கான சிற்றரசர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. அவர்கள் தான் இந்திய பெரும் பரப்பை ஒரே ஆளுகை யின் கீழ் கொண்டு வந்தனர். ஆரியர்கள், திராவிடர்கள் என்பது பல நூற்றாண்டு களாக இங்கே வாழ்கிறார்கள் என்று குறிப்பிடுகின்றார்கள்.

இது மட்டுமல்லாமல் ஆளுநர் ரவி பங்கு பற்றிய மற்றொரு நிகழ்வில், இந்தியா வில் உள்ள மாநிலங்களை தனித்தனியாக பிரித்துப் பார்க்காமல், ஒரே குடும்பமாக பார்த்தால் தான் இந்தியா ஒருங்கி ணைந்த வளர்ச்சியை எட்ட முடியும் என்றும் குறிப்பிட்டார்.

சமூக மானுடவியலாளர்கள், இது குறித்து கூறுகையில், இந்தியாவில் உள்ள பல மாநிலங்கள் பன்முக தன்மை யுடனும், தனி தன்மையுடனும் இருப் பதை, ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் விசு வாசியான ஆளுநர் ரவியால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. மேலும் ஒரே தேசம் ஒரே மக்கள் ஒரே கொள்கை என்ற ஒற்றை சித்தாந்தத்தில் அவர் பெரு விருப்பம் கொண்டிருப்பதால், மாநிலங்கள் தனித்தன்மையுடன் வளர்ச்சி பெற்று வருவதை அங்கீகரிக்க மறுப்ப தன் அடையாளம் தான் அவரது இந்த பேச்சு என்று குறிப்பிடுகிறார்கள்.

மற்றொரு நிகழ்வில், ஆளுநர் ரவி, தேச த்தை நாம் பன்முகத்தன்மை கொண்ட தாக பார்க்கவில்லை. அதை ஒன்றாகத் தான் பார்க்கிறோம் என்கிறார். இதன் மூலம் இந்தியாவின் பன்முக கலாசார பண்பாட்டு மற்றும் பாரம்பரியத்தை



ஏற்கவும் அவர் மறுக்கிறார் என்பது உறுதியாக தெரிய வருகிறது என்று சமூகவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள். இதனிடையே ஆளுநர் ஆர்.என் ரவியின் கருத்துக்கள் குறித்து, தி.மு.க.வின் மூத்த நிர்வாகிகள் கூறுகையில், ஆளுநர் பேசியதற்கு அந்த மேடையிலேயே கண்ணியமாகவும், நேர்த்தியாகவும், தெளிவாகவும் மறுத்து, உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி விளக்க மளித்தார். மேலும் தமிழகத்தை ஆட்சி செய்வது மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஒரு அரசாங்கம்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் தமிழக மக்களின் வரிப்பணத்தில் நடத்த ப்படுகிறது. அதனை நிர்வாகிப்பது தமிழக உயர்கல்வித்துறை. அதன் பட்ட மளிப்பு விழாவில் பங்கு பற்றும் ஆளுநர், ஒரு சிறப்பு அதிதி மட்டும் தான். அவர் தன் எல்லைகளை உணர்ந்து கொண்டு, மாணவர்களிடம் உரையாற்றிருக்க வேண்டும்.

அதேநேரம் தலைவர் ஸ்டாலின் அமைதி யாக எதிர்ப்பு தெரிவிக்காமல் இருக்கிறார் என்று அர்த்தமல்ல. திராவிட முறை மையை அறிமுகப்படுத்தி, அதனை வெற்றிகரமாக செயல்படுத்தி வரும் அரசு, உரிய பதிலடியை சரியான தரு ணத்தில் வெளிப்படுத்தும் என்றனர்.

இவ்வாறிருக்க, ஆளுநர்கள் விவகாரத் தில் மேற்கு வங்காள அரசு மற்றும் தெலுங்கானா மாநில அரசு உறுதியான எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்கி இருக் கிறது. அது போன்றதொரு நடவடி க்கையில் தமிழக அரசும் முழுமனது டன் ஈடுபட வேண்டும். ஏனெனில் ஆளுநர் ரவி மத்திய அரசின் துதி பாடியாக மட்டுமில்லாமல், ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் சித்தாந்தங்களை தமிழக மக்கள் மீது தொடர்ச்சியாக திணிக்கும் அதிகாரம் மிக்க நபராகவும் வலம் வரு கிறார் என்பது வெகுவாக உணரப் பட்டுள்ளது.

அத்துடன் ஆளுநர் ரவி மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசின் செயற் பாடுகளுக்கு புறம்பான செயல்களில் அவர் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். திராவிட இனம், ஆரிய இனம் என்று இரண்டும் இந்திய நாட்டில் இருப்பதை உலகளவில் மானிடவியல் அறிஞர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவ்விடயத்தில் திராவிடம் என்பது இனம் அல்ல, அது நிலப்பரப்பு மட்டுமே என்று ஆளுநர் கூறுகிறார். அது மட்டு மல்ல அண்மையில் ஆளுநர் மாளிகை யின் சார்பாக, பாடசாலை மற்றும்



கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கட்டுரை போட்டி ஒன்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. இந்த போட்டிகளின் உள்நோக்கம், ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தங் களை மாணவர்களிடத்தில் பரப்பி, அவர்களை மூளை சலவை செய்யும் கருவியாக பயன்படுத்துவதை அடிப் படையாகக் கொண்டதா என்ற சந்தேக ங்கள் வலுத்துள்ளன.

இதனிடையே பா.ஜ.க.வைச் சேர்ந்த தமிழக சட்டமன்ற உறுப்பினரான திருமதி வானதி சீனிவாசன், 'நீதி கட்சி கள் தோற்றம் என்பதே வங்காள பிரிவினை போன்றதொரு ஆங்கிலேயரின் பிரித்தாளும் சூழ்ச்சி தான். வெளிப்படை யாக தனி நாடு கேட்டால், பிரிவினை வாதம் பேசினால், தி.மு.க. என்ற கட்சியே இருக்காது. கட்சி இல்லை என்றால் ஆட்சியும் இருக்காது. இதுவெல்லாம் தி.மு.க.வுக்கும் நன்றாகவே தெரியும். அதனால் தான் மாநில சுயாட்சி, மாநில உரிமை' என்ற போர்வையை போர்த்திக் கொண்டு, அவ்வப்போது பிரிவினை வாதம் பேசுகின்றனர். அவர்களின் நோக் கம் இளைஞர்களின் மனதில் பிரிவினை என்ற நஞ்சை விதைப்பது தான். இதை புரிந்துதான் ஆளுநர் ரவி இளைஞர்களி டத்தில் உரையாற்றும் போது உண் மையை பேசி வருகிறார் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

எவ்வாறாயினும், தமிழ் நாட்டிற்கென தனித்தன்மை உண்டு. அதனை என்றெ ன்றும் பேணி காப்பது, தி.மு.க., அ.தி.மு.க. என்ற இருமுனை திராவிட அரசியல் கட்சிகளின் தலையாய கடமை யாகும். சமுதாய உணர்வும், விழிப்பு ணர்வும் கொண்ட ஏனைய அரசியல் கட்சியினரும், பொதுமக்களும், மாண வர் சமுதாயமும் தமிழகத்தில் தொட ர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கிறது என்பதனை ஆளுநர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் தனது அதிகார எல்லையை உணர்ந்து, நடவடிக்கையை வடிவ மைத்துக் கொள்ள வேண்டும். அவர் மீறி செயல்பட்டால்.. அரசியல் கட்சி களின் கோபம், பொது மக்களின் ஆதரவு, அவருக்கு எதிரான நிலைப் பாடு, ஆகியன தமிழகத்தில் உருவாகும் நிலைமைகளும் அதிகமாகவே உள்ளன.




மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை
ஜாதகம் பார்க்கப்படும்
கடந்த 40 வருடமாக தென்னிந்தியா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் கனடாவில் பல தமிழ் மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்த திரு. கோ. காசிலிங்கம் அவர்கள் இப்போது கனடாவில். பிறந்த வருடம், மாதம், திகதி, நேரத்தை சொன்னால் போதும் நந்தி வாக்கியம் மூலம் நாள் நட்சத்திரம் கண்டு நடந்தது நடக்கப் போவதை தனது திறமையால் மிகத் துல்லியமாகக் குறித்து எழுதி பலன் சொல்லப்படும்.
குழந்தைகளுக்கு ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும்
திருமணப் பொருத்தம் பார்த்து சொல்லப்படும்
கோ. காசிலிங்கம்
1320 Pharmacy Ave, Scarborough ON, M1R 2T3 (Main Intersection Pharmacy and Ellesmere Rd)
Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164





கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம் பெருமையுடன் வழங்கும்
இவ்வாண்டின்
மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
அனுமதி இலவசம்
FREE ADMISSION
JOYTHI
Blazing Minds
2022
Super Singer
Balaji
Super Singer
Vanathi
Super Singer
Abarna
POWERED BY
ANANTH
THARMALINGAM
RAJESH
LINGANATHAN
416-939-9525
THE REMAX Guys
RE/MAX
COMMUNITY
RAISING YOUR VALUE
PLATINUM SPONSOR
RhynoCare
TAKE CHARGE OF YOUR HEALTH
416 830 8181
SILVER SPONSOR
Nluniu's
ROOFING INC.
www.nluniuroofing.ca
647-567-8564
Mega Tuners
GRAND MUSICAL EVENT
WITH CANADIAN SINGERS & SUPER SINGERS
JULY 30 - 31 ALL DAY EVENT
Canada Sri Ayyappan Temple
635 Middlefield Road, Scarborough, ONTARIO. M1V 5B8
FOR ADD AND VENDORS PLEASE CONTACT : 416-321-6104, 416-321-7558


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! ஒவ்வொரு முடிவு எடுக்கும் போதும் பல முறை சிந்தித்து செயல்படுங்கள். பூர்வீக சொத்துகளால் பிரச்சனைகள் வந்து போகும். சுபச் செலவு எதிர்பாராமல் வந்து கொண்டே இருக்கும். கார்களில் செல்லும் போது சீட் பெல்ட் அவசியம் அணிந்து கொள்ளவும். உங்கள் குடும்பத்திற்கு ஆன்மீக அன்பர்களின் வழிகாட்டுதலும், ஒத்துழைப்பும் கிடைக்கும். பொதுவாக இவ்வாரம் இறைவழிபாடு செய்வது நன்மை தரும்.





ரிஷபராசி அன்பர்களே! நிதானமாகவும், பொறுமையாகவும் இருக்க வேண்டிய காலமிது. மறைமுக எதிரிகளால் ஏற்படும் ஒவ்வொரு பிரச்னையும் உங்களுக்கே நன்மையை கொடுக்கும். குடும்பத்தில் யாருக்கும் வாக்கு கொடுக்காமல் தவிர்க்கவும். அரசாங்க வழிகளில் ஒத்துழைப்பு கிடைக்கும். உஷ்ண சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், கண் பிரசச்னைகள் வந்து போகும். புத்திரர்கள் இடத்தில் கவனத்தை செலுத்த வேண்டிய காலகட்டமிது.





மிதுனராசி அன்பர்களே! எண்ணத்தில் தெளிவும், உள்ளத்தில் உற்சாகமும் இருக்கும். சுப காரியங்களை முன்னின்று செய்வீர்கள். விடுபட்டு போன பழைய சொந்தம் மீண்டும் மலரும். புத்திர வழியில் மகிழ்ச்சியான செய்திகள் கிடைக்கும். முகத்தில் பொலிவும், புத்துணர்ச்சியும் இருக்கும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த பூர்வீக சொத்துக்களின் பிரச்சனைகள் நீங்கும். புத்திர வழிகளில் புகழும் செல்வாக்கும் கிடைக்கும்.





கடகராசி அன்பர்களே! சிந்தனையும், செயலும் மேம்படும். ஒவ வொரு காரியமும் உங்களுக்கு வெற்றியை கொடுக்கும். புது வாகனங்கள் அமையும். சாதாரண விஷயங்களுக்கு கூட தந்தையுடன் கருத்து வேறுபாடு வரலாம். குடும்பத்தில் மனைவி வழியில் உள்ள உறவினரின் திருமண காரியங்களுக்கு உதவி செய்யும் சூழ்நிலை ஏற்படும். சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும். அந்நிய தேசத்தில் இருந்து வரும் நல்ல செய்தி மனமகிழ்வைத் தரும்.





சிம்மராசி அன்பர்களே! எதிர்பார்த்த இடங்களிலிருந்து நல்ல செய்தி வரும். உங்கள் பணம் உங்களிடம் வந்து சேரும். எந்த சந்தர்ப்பத்திலும் கோபமாகாமல் தேவையற்ற பேச்சுகளை குறைப்பது நன்மையை தரும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். குல தெய்வ வழிபாட்டால் நற்பலன்கள் ஏற்படும். மன தைரியம் உண்டாகும். வாழ்க்கைத் துணையால் லாபங்கள் ஏற்படும்.




கன்னிராசி அன்பர்களே! தடுமாற வைக்கும் சோதனைகள் கூட உங்களின் தெய்வ பக்தியால் பகலவனை கண்ட பனி போல் விலகி விடும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும், வாழ்க்கைத் துணையால் லாபங்கள் ஏற்படும். தந்தையின் உடன் பிறந்தோரால் நல்ல செய்தி கிடைக்கும். புத்திரர்களால் சில சங்கடங்களை சந்திக்க நேரிடும். எதிர்பாராத தன லாபம் கிடைக்கும். அரசு வேலை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும்..





துலாம்ராசி அன்பர்களே! உங்கள் வாழ்க்கைத் துணை உங்களுக்கு எப்போதும் ஆதரவாக இருப்பார். தந்தையின் உடல்நிலையில் கவனம் செலுத்த வேண்டிய நேரமிது. குடும்ப ஒற்றுமையில் சிறு சலனங்கள் ஏற்படலாம். அதனால் கவனமுடன் நடக்கவும். குடும்ப உறுப்பினர்களை கண்டிக்கும் போது தேவையில்லாத வார்த்தைகளை பயன்படுத்தாமல் நிதானமாக பேசவும். அடிக்கடி மனக் குழப்பங்கள் வந்து மறையும். உங்களின் அன்பான அணுகுமுறையால் எல்லாரையும் திருத்தி விடுவீர்கள்.





விருச்சிகராசி அன்பர்களே! எந்த சூழ்நிலையிலும் மன உறுதியுடன் செயல்படுவீர்கள். நீண்ட நாட்களாக வராமல் இருந்த நல்ல செய்தி வந்து சேரும். குடும்பத்தில் அமைதி நிலவும். வாழ்க்கைத் துணையிடம் கருத்து வேறுபாடுகள் வந்தாலும் பின்பு உங்கள் மனதை புரிந்து கொண்டு சமாதானம் ஆகி விடுவார். உத்யோகஸ்தர்கள் சவால் மிகுந்த வேலைகளை முடித்து மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவர். தொழில் துறையினருக்கு மந்தமான காலம்








தனுசுராசி அன்பர்களே! எந்த காரியத்திலும் அவசரமும் படபடப்பும் இல்லாமல் செயல்படவும். மங்கல காரியங்கள் நடக்கும். நீங்கள் நேர்மையாக பேசும் பேச்சு சிலருக்கு பிடிக்காமல் போகாலாம். இடம், பொருள் பார்த்து பேசுவது நல்லது. தாயாரின் உடல் நிலையில் கவனமாக இருக்கவும். புத்திர வழியில் மதிப்பும், செல்வாக்கும் உண்டாகும். சில நேரங்களில் தாயாரின் சொல் புண்படுத்தக் கூடும். கவலை கொள்ள வேண்டாம்.




மகரராசி அன்பர்களே! மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் அதிகரிக்கும். வழக்குகள் சார்ந்த எதிலும் சற்று கூடுதல் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் சில சங்கடங்கள் வந்தாலும் உங்கள் சாமர்த்தியத்தால் எதையும் சமாளித்து விடுவீர்கள். கடன் பிரச்னை படிப்படியாக குறையும். புத்திரர்களின் செயல்பாடுகளை கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டிய நேரம். அவர்களின் செயல்பாடுகள் உங்களுக்கு சங்கடத்தை தரலாம்.




கும்பராசி அன்பர்களே! தடைப்பட்டுப் போயிருந்த காரியங்கள் எல்லாவற்றையும் வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். உங்கள் இல்லங்களில் சுபமான நிகழ்ச்சிகள் இனிதே நடைபெறும். சில சமயங்களில் அசாத்திய தைரியத்தால் சில முடிவுகளை எடுப்பீர்கள். அது உங்களுக்கே பாதகமாகி விடும். அதனால் நிதானமாக இருப்பது நன்மையாகும். குடும்பத்தில் திருமணமாகாதவர்களுக்கு நல்ல வரன் அமையும்.




மீனராசி அன்பர்களே! எந்த காரியத்தையும் அவசரமும் படபடப்பும் இல்லாமல் செயல்படவும். எதிர்பாராத செலவுகளுக்கு வாங்கிய கடன்களால் மனச்சங்கடங்களுக்கு ஆளானாலும் உங்களின் நாணயமான குணத்தினால் சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத் துணையிடம் கருத்து வேறுபாடு வரும் சூழ்நிலை உருவாகும். கவனமுடன் இருக்கவும்.தந்தை வழி உறவினர்கள் மறைமுகத் தொல்லைகள் கொடுப்பார்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# போராட்டங்களில் மாற்றம் தேவை

(17ம் பக்கத் தொடர்ச்சி) எதிர்பார்ப்புகள் முன்வைக்கப்பட்ட அளவுக்கு, அவற்றைச் செயற்படுத்துவதற்கான வழிமுறைத் தொடர்ச்சி முன் வைக்கப்படவில்லை. அதை ஒழுங்கமைக்கும் முறைமைகள் பற்றிச் சிந்திக்கவில்லை.

எதிர்த்தரப்பின் அதிகாரம், அதன் மாற்றங்கள், அதனுடைய புதிய தந்திரோபயங்கள் எல்லாம் வலுவானவை. அவை பற்றியெல்லாம் சிந்தித்திருக்க வேண்டும். அதைச் சிந்திப்பதற்கு, அதைக்குறித்து உரையாடுவதற்கு, அதை எதிர்கொள்வதற்கு உறுதியான தெளிவான தலைமைத்துவம் வேண்டும். இந்தப் போராட்டத்தில் அந்தத் தன்மை குறைவாகவே காணப்பட்டது. ஏன் இல்லை என்றே சொல்ல வேண்டும். பல்கலைக்கழகங்களின் மாணவர்கள், இளைய பௌத்தத் துறவிகள், பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரள் அங்கே இருந்தாலும் அவர்களை வழிப்படுத்தக் கூடிய தலைமை என்ற ஒன்று வெளிப்படையாக முகம் காட்டக் கூடிய அளவில் இல்லை. பின்னணியில் முன்னிலை சோசலிஷக் கட்சி மற்றும் மக்கள் ஐக்கிய முன்னி என்ற ஜே.வி.பி இருக்கிறது என்று சொன்னாலும் அந்தச் சக்திகளால் முழுமையாக இந்தப் பிரச்சினையைக் கையாள முடியவில்லை.

இதை இந்தச் சூழலை, இந்தப் பலவீனத்தை ரணில் தனக்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார். ஒன்று தனக்குப் போட்டியாக நிகராக இன்றைய இலங்கை அரசியற் சூழலில் யாரும் எந்தத் தரப்பும் இல்லை என்பதை நிரூபித்திருக்கிறார். இரண்டாவது தனக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தின் மூலம் மிக விரைவாக அவர் போராட்டத்தை ஒடுக்க முற்படுவார். பல முனைகளிலும் அதிகாரத்தைப் பிரயோகிக்கவும் கட்டமைக்கவும் முற்படுவார். அப்படியென்றால் தான் அவருடைய அரசியல் பலவீனங்களை மறைத்துக் கொள்வதுடன் தன்னை முன்னிலையிலும் வைத்துக் கொள்ள முடியும். மூன்றாவது சர்வதேச சமூகத்தின் (தன்னுடைய அரசியல் நட்பு நாடுகளுடன் இணைந்து) ஆதரவுடன் மக்களுடைய உடனடிப் பிரச்சினைகளான எரிபொருள் நெருக்கடி, எரிவாயுப் பிரச்சினை, விவசாயத்துக்குத் தேவையான உள்ளீட்டு விவகாரம் போன்றவற்றுக்கு ஓரளவாவது தீர்வைக் காண முற்படுவார். இதன் மூலம் மக்களின் எழுச்சியையும் எதிர்ப்பலையையும் தணித்து விட முயற்சிப்பார்.

ஒப்பீட்டளவில் ரணில் விக்கிரமசிங்க மிகப் பெரிய அரசியற் தந்திரசாலி. அவர் என்ன நினைக்கிறார், என்ன செய்யப்போகிறார் என்று எவராலும் கண்டறிய முடியாது என்பா◌ . அதுதான் தொடர்ந்தும் நடக்கப்போகிறது. ரணில் என்ன செய்வார்? யாரை வீழ்த்துவார். யாரை அணைத்துக் கொள்வார் என்று யாருக்குமே தெரியாது. அப்படியானதொரு இருண்ட காலகட்டத்தில் இருண்ட சூழலில் மக்களாகிய நாம் வந்திருக்கிறோம்.

இப்பொழுது போராட்டத்தை முன்னெடுத்தோர் மேலும் உறுதிப்பாட்டுடனும் புதிய அனுபவத் தெளிவோடும் மீளெழுச்சி கொள்ள வேண்டும். குறைந்த ஆபத்தை விட கூடிய ஆபத்தை கட்டுப்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். ஆகவே காலிமுகப் போராட்டத்தரப்புக்கும் மாற்றத்தை விரும்புகின்ற மக்களுக்கும் இப்பொழுதுதான் பெரிய வேலைகள் கிடைத்துள்ளன. வரலாறு அந்தப் பொறுப்பை சுமத்துகிறது. ஆம், புதிய முறையில் எதிரியை ரணிலை நிறைவேற்று அதிகாரத்தை எதிர்கொள்ள வேண்டும். இது எளிய விசயமல்ல. உயிராபத்துகள் நிறைந்தது. அதிகாரத்துடன் மோதுவதும் அதில் மாற்றங்களை ஏற்படுத்துவதும் இலகுவானதல்ல. இதுவே வரலாற்றின் அனுபவமும் உண்மையுமாகும்.

போருக்குப் பிந்திய இலங்கை இன்னொரு போரை அதிகாரத்துக்கு எதிரான பொருளாதா நெருக்கடிக்கு எதிரான போரைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது. கால நிர்ப்பந்தமே மாற்றங்களை எப்போதும் உண்டாக்குவன. அந்தக் காலம் இலங்கைக்கு வாய்த்திருக்கிறது. இனி மக்களுடைய மனங்களிலும் கரங்களிலும் தான் அனைத்துமே.

# இளையராஜா எனும் நான் கடவுளின் பெயரால் என தமிழில் கூறி பதவியேற்பு!



குடியரசு தலைவராக ராம்நாத் கோவிந்த் இருந்த போது இளையராஜா, முன்னாள் தடகள வீராங்கனை பி.டி. உஷா, ஆந்திராவைச் சேர்ந்த கதாசிரியர் விஜயேந்திர பிரசாத், கர்நாடகாவைச் சேர்ந்த வீரேந்திர ஹெக்கடே ஆகியோரை மாநிலங்களவை நியமன உறுப்பினர்களாக முன்மொழிந்தார். இதில் இளையராஜா நீங்கலாக மற்ற மூவரும் நடப்பு மழைக் கால கூட்டத்தொடர் தொடங்கியபோது எம்.பி ஆக பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

இளையராஜா அமெரிக்காவில் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்ததால் அவர் முதல் நாள் நிகழ்வில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வரவில்லை. இந்த நிலையில், குடியரசு தலைவராக திரௌபதி முர்மூ பதவிப் பிரமாணம் செய்து கொண்டதையொட்டி இரு அவை உறுப்பினர்களும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் இந்த நிகழ்ச்சி நடை பெற்றது.

இதையடுத்து இளையராஜாவை பதவியேற்க வரும்படி மாநிலங்களவை செகரட்டரி ஜெனரல் அழைப்பு விடுத்தார். அப்போது கையில் தமிழில் எழுதப்பட்ட காகிதத்துடன் வந்த இளையராஜா, தமது பதவிப்பிரமாணத்தை தமிழ் மொழியில் எடுத்துக் கொண்டார். மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கும் இளையராஜா எனும் நான், சட்டத்தினால் நிறுவப்பெற்றதான இந்திய அரசியல் சட்டத்தின் மீது உண்மையான பற்றார்வமும் பற்றுறுதியும் கொண்டிருப்பேன் என்றும் இந்தியாவின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் உறுதியாக பற்றிருப்பேன் என்றும் நான் இப்போது ஏற்கவிருக்கும் கடமையினை நேர்மையாக நிறைவேற்றுவேன் என்றும் 'கடவுளின்' பெயரால் ஆணையிட்டுக் கூறுகிறேன்,' என்று இளையராஜா பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். பின்னர் நடைமுறைப்படி பதவியேற்பு ஆவணத்தில் அவர் கையெழுத்திட்ட போது உறுப்பினர்கள் மேஜையைத் தட்டி அவரை வரவேற்றனர்.

தமிழ் திரையுலகத்தை தனது இசையால் அரை நூற்றாண்டு காலம் ஆண்ட இளையராஜா, 1000 படங்களுக்கு மேல் ஸ்கோர் செய்து 5 தேசிய விருதுகளை பெற்றுள்ளார். தற்போது 79 வயதாகும் இளையராஜாவுக்கு 2010ஆம் ஆண்டு பத்மபூஷண் விருது வழங்கி மத்திய அரசு கௌரவித்தது. அதன்பிறகு 2018ஆம் ஆண்டு பத்மவிபூஷண் விருது அவருக்கு வழங்கப்பட்ட நிலையில், இசைத்துரையில் அவர் ஆற்றி வரும் சேவையை கௌரவிக்கும் விதமாக கலைத்துறையில் இருந்து அவரை நியமன எம்.பி.யாக குடியரசு தலைவர் நியமித்திருக்கிறார்.


TITLE SPONSOR
SIVAGURU
CUSTOM HOMES INC
An Event By
ARYA
CANADA INC
RADIO PARTNER
east FM 102.7
SATURDAY
SUNDAY
கோடையில்
RAAgA fest
LIVE MUSIC
—with MANI & BAND
மாபெரும் இன்னிசைப் பெருவிழா
POWERED BY SPONSOR
Neujan
REALTOR MUTHIAH
FOR NEW GEN
POWERED BY SPONSOR
HIMELFARB PROSZANSKI LLP
Personal Injury Lawyers
CO-SPONSOR
MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
KINGS CORNER
SPORTS BAR & GRILL
PLATINUM
Ai HR Solutions Inc.
GOLD
PUMPKINKART
Delivering Happiness
DYNEVOR EXPRESS
YTI CHARTER
VIP CUISINE EXPERIENCE
SOUTHERN AROMA
PRINTING PARTNER
INK DRIP
GROUP OF COMPANIES
GATES OPEN 3 PM SHOW STARS 5 PM
COMMUNITY PARTNER
MR.TAMIL Canada
SUPPORTING PARTNERS
Netwyn.Place
TORBRAM
FIRE PROTECTION
Vijay Selvarajah,
B.Com, CPA, CGA, Mortgage Agent
Mortgage Alliance Access Inc.
MARKHAM ROAD
REESOR ROAD
STEELES AVE E
PARKING
14TH AVE
11TH CONCESSION
VENUE | இடம்
8100 STEELES AVE
(STEELES & REESOR RD)
MARKHAM MEADOW
FOR PARKING ENTRY USE
14TH AVENUE & 11 CONCESSION
UNIQUE VIP EXPERIENCE WITH FOOD & DRINKS
SATURDAY 06 AUGUST 2022 SUNDAY 07
Ticket Hotline
647 848 1342
FREE PARKING
MASK Recommended
aryacanInc
aryacanadainc
www.aryacanadainc.com
Ticket Online
PUMPKINKART
www.pumpkinkart.com/download

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு வாங்க.. விற்க..

HomeLife Higher Standards

Ravi. Paramu
Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



RANJANI THIRUKESWARAN LAW OFFICE



- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242



Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)



மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!



ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca

KABIS
KABIS & ASSOCIATES INC.

- Life Insurance
- Critical Illness
- Disability
- RESP
- RRSP
- Mortgage Protection Insurance
- Travel Insurance (Super Visa)

Foresters | iA Industrial Alliance | Canada Protection Plan | Assumption Life



OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST

HOMELIFE Higher Standards

ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001



TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*




RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599* FLAT RATE

Aalayaa

2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

அபாயம் உண்மையாகலாம்.

சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.



புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?

| In Canada | |
|---|---|
| Breast Cancer | 1 woman in 8 |
| Prostate Cancer | 1 man in 7 |
| Heart disease | 1 person in 4 |
| Stroke (CVA) | 1 person in 20 |

Fortunately, more people are surviving these afflictions and living longer lives.

| Survival Rate | |
|---|---|
| Cancer | 60% |
| Heart Attack | 85% |
| Stroke | 1 person in 4 |

Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.

- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years

BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%

Industry critical illness claim breakdown[3]




iA Financial Group

AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.

